Registered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 29—No. 12

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே,'

மலர் 29	துன்முகி மார்கழி **1956** டிசம்பர்	இதழ் 12

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

சமாஜ அறிக்கைகள்

1. மலாய் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள சமாஜ உறுப்பினர்கள், தயைகூர்ந்து அடுத்த ஆண்டு (1957) சந்தாவை "ம. பாலசுப்பிரமணிய முதலியார், **150**, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை—1" என்ற முகவரிக்கு மணிஆர்டர் மூலம் அல்லது British Postal Order மூலம் கூடிய சீக்கிரம் அனுப்பவும். ஒவ்வொருவரும் தனித் தனியே அனுப்புவதைவிட உறுப்பினர் பலர் கூடி மொத்தத் தொகையை, மேற்கூறியபடி அனுப்பவும். மலாய் நாட்டு உறுப்பினர்கள் சந்தாவைத் திருவாளர்கள் கா. இராமநாதன் செட்டியார், B.A., B.L. அவர்களும், சிவநேயனும் அனுப்பியதைச் சமாஜம் நன்றியுடன் பாராட்டுகிறது. 1957-ம் ஆண்டுச் சந்தாவையும் அம்மாதிரியே எதிர்பார்க்கின்றது. சமாஜம் வி. பி.யில் வசூலிப்பதென்றால் P. P. Form வாங்குவது முதலியவற்றால் காலதாமதம், அதிகச் செலவு முதலியன ஏற்படுகின்றன.

2. இந்தியாவில் உள்ள சமாஜ உறுப்பினர் கூடிய விரைவில் அடுத்த 1957ஆ சாந்தாவை மேலே குறித்துள்ள முகவரிக்கே அனுப்ப வேண்டுகிறோம். மணியார்டர் கூப்பனில் தங்கள் முழுப் பெயர், சந்தா எண், தற்போதைய தபால் முகவரி முதலியன தெளிவாகக் குறித்தல் அவசியம்.

3. 31—12—1956-க்குள் 1957-ம் ஆண்டுச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு 1957-ம் ஆண்டு ஜனவரி மாத "சித்தாந்தம்" இதழ் 10—1—57-ல் வி. பி. மூலம் அனுப்பப்படும்.—தி. கி. நாராயணசாமி, பொதுச்செயலாளர்.

சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம்

நமது சமாஜத்தின் 51-ம் ஆண்டுவிழா நடைபெற வேண்டிய இடம், தேதிகள், தலைவர்கள் முதலிய விபரங்களை ஆலோசித்து முடிவு செய்வதற்கு சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் ஒன்று இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகானந்த நிலைய'த்தில் 1956 டிசம்பர் 22உ. சனிக்கிழமை காலை 8-55 மணிக்குக் கூடும். அன்று போதிய கூட்ட நிறைவெண் (Quorum) இல்லாவிடில், அக்கூட்டம் அதே இடத்தில் அடுத்த நாள் காலை அதே மணிக்குக் கூடி முடிவு செய்யும்.—**தி. கி. நாராயணசாமி நாயுடு**, சமாஜப் பொதுக் காரியதரிசி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

51-வது ஆண்டு நிறைவு விழா

பெண்ணாகடம்

பொன்னார் திரு அடிக்கு ஒன்றுஉண்டு விண்ணப்பம்: போற்றிசெய்யும்
என்ஆவி காப்பதற்கு இச்சைஉண்டேல், இருங்கூற்று அகல,
மின்ஆர் மூவிலைச் சூலம் என்மேல் பொறி ! மேவுகொண்டல்,
துன்ஆர் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே !

அன்புடையீர்,

நிகழும் துன்முகி ஆண்டு மார்கழித் திங்கள் 16-ம் நாள் (30-12-1956) ஞாயிற்றுக்கிழமை தொடங்கி, 3 நாட்கள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 51-வது ஆண்டு நிறைவு விழாவும், அதன் அங்கமாக சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், சைவ சந்தான முதற்குரவர் மெய் கண்டார் தோன்றிய திருப்பெண்ணாகடத்தில், அடுத்துக் காணும் நிகழ்ச்சி முறைப்படி நடைபெறும்.

ஆண்டு விழாவிற்கும், சைவர் மாநாட்டிற்கும் மயிலம் - ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் ஆதீனத் தலைவர் அவர்கள் தலைமை வகிப்பார்கள். சென்னை இராஜ்யக் கல்லூரி விலங்கியல் துணைப் பேராசிரியர் திரு. ச. கற்பகவள்ளி, பி.ஏ., பி. எஸ்ஸி., (ஆனர்ஸ்)., அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், சென்னை, முத்தியால்பேட்டை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியரும் மறைமலையடிகளார் மாணவருமான திரு. புலவர் - முருகவேள், பி. ஓ. எல்., அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகிப்பார்கள்.

மொழிவழி நாடு அமைந்த பின் நிகழும் இம்மாநிலச் சைவர் மாநாட்டில், தாங்கள், தங்கள் சபையின் தொண்டர்க

ளோடும், பிற அன்பர்களோடும் மூன்று நாட்களும் வந்திருந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

அ. சோமசுந்தரம் செட்டியார்
சமாஜத் தலைவர்

ச. அரங்கசாமிப் பிள்ளை
வரவேற்புத் தலைவர்

தி. கி. நாராயணசாமி நாயுடு
சமாஜப் பொதுக் காரியதரிசி

ந. கு. நடராஜப் பிள்ளை
ச. முத்துக்குமரசாமிப் பிள்ளை
ரா. குஞ்சிதபாதம் பிள்ளை
கு. சு. கி. பாண்டுரங்க செட்டியார்
வரவேற்புத் துணைத்தலைவர்கள்

நிகழ்ச்சி முறை

துன்முகி, மார்கழி, 16-ம் நாள் (30-12-1956)
ஞாயிற்றுக்கிழமை

காலை 6—7 திருக்கோயில் வழிபாடு.
" 8-12 தலைவர் அவர்களை ஊர்வலமாக அழைத்து வருதல், இறை வணக்கம், வரவேற்புரை, ஆண்டறிக்கை, தலைமைப் பேருரைகள்.
மாலை 3—8 இறை வணக்கம், முன்னுரை, சொற்பொழிவுகள், கருத்துரை, கடவுள் வாழ்த்து.

சொற்பொழிவுகள் :—

1. திரு. வித்துவான் அடிகளாசிரியர் அவர்கள், ஆசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரி.
—' சைவ சமய உண்மைகளும் தமிழ் நூல்களும் '
2. திரு. க. அரங்கசாமி முதலியார், பி. ஏ. அவர்கள், அடிவாரம், பழனி.
—' சிவஞான போதம் - ஆராய்ச்சி '*
3. திரு. வித்வான்-செ. வேங்கடராம செட்டியார் அவர்கள், ஆசிரியர், தருமை ஆதீனப் புலவர் கல்லூரி.
—'திருமுருகாற்றுப்படை - சைவ சித்தாந்த விளக்கமே'

---

*பின் இரு நாட் காலையிலும் இவ்விரிவுரை தொடர்ந்து நிகழும்.

மார்கழி, 17-ம் நாள் (31-12-1956)
திங்கட்கிழமை

காலை 6—7 திருக்கோயில் வழிபாடு.

„ 8–12 **சைவ மங்கையர் மாநாடு:** இறைவணக்கம், முன்னுரை, சொற்பொழிவுகள், கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மாலை 3—8 **சைவர் மாநாடு:** இறை வணக்கம், முன்னுரை, சொற்பொழிவுகள், கருத்துரை, கடவுள் வாழ்த்து.

சொற்பொழிவுகள் :—

1. திரு. வித்வான் - அ. நடேச முதலியார் அவர்கள், விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம். —‘ இன்றைய சமயப்பணி ’
2. திரு. வித்வான்-சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள், ஆசிரியர், பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். —‘ திருந்தொண்டின் நெறி ’
3. திரு.வித்வான் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், விரிவுரையாளர், மீனாட்சிக் கல்லூரி, மதுரை. —‘ அருள் இயக்கம் ’

மார்கழி, 18-ம் நாள் (1-1-1957)
செவ்வாய்க்கிழமை

காலை 6—7 திருக்கோயில் வழிபாடு.

„ 8—9 சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம், பணியாளர் தேர்தல்.

„ 9–12 **சைவ இளைஞர் மாநாடு:** இறை வணக்கம், முன்னுரை, சொற்பொழிவுகள், கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மாலை 3—8 **சைவர் மாநாடு:** இறை வணக்கம், முன்னுரை, சைவப் புலவர் பட்டம் அளிப்பு, சொற்பொழிவுகள், பொதுக்காரியதரிசி நன்றிகூறல், கருத்துரை, முடிவுரை, கடவுள் வாழ்த்து.

சொற்பொழிவுகள் :—

1. திரு. ந. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், பள்ளியக்கிரகாரம். —‘ திருவாசக மூலம் - பாடவேறுபாடுகள் ’

2. திரு. சாம. இராமலிங்கம், எம்.ஏ., அவர்கள், விரிவுரையாளர், மெய்ப்பொருளியல் துறை, அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

—'திருவண்டப் பகுதியின் நுட்பம் - மாணிக்கவாசகர் பேறு'

3. திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி., அவர்கள், ஆசிரியர், பச்சையப்பர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். —'நம்பியாண்டார் நம்பிகள்'

குறிப்பு :—விழுப்புரம் - திருச்சி குறுக்கு ரயில் வழியில் **பெண்ணகடம்** ஒரு ரயிலடி. ஊர் ரயிலடிக்குக் கிழக்கே 1½ மைல். கலிக்காம நாயனர் தலம். அப்பர் அடிகளுக்கு இறைவன் சூல இடபக் குறிகளைப் பொறித்தருளிய தலம். ஆலயப் பெயர்-திருத் தூங்கானை மாடம். அருகிலுள்ள **திருமுதுகுன்றம்** (விருத்தாசலம்), சுந்தரர் பொன்பெற்ற இடம், காசியினும் சிறந்தது. பெண்ணகடம் ரயிலடிக்குத் தென்மேற்கே 3 மைலில் இறைவன் சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, குடை, சின்னம் வழங்கிய **திருநெல்வாயில் அரத்துறை** எனுந் தலமுள்ளது.

மாநாடு நடைபெறும் இடத்தில் சமாஜப் பதிப்புக்களாகிய பெரியபுராணம், திருப்போரூர்ச் சந்நிதிமுறை, திருவெம்பாவை—திருப்பள்ளியெழுச்சி மூலமும் உரையும், பொன் விழா மலர், தேவாரம் அடங்கன்முறை முதலிய நூல்கள் விலைக்குக் கிடைக்கும்.

சமாஜத்தின் அங்கத்தினர்கட்கு மட்டும் வரவேற்புக் கழகத்தினரால் இலவசமாக உணவிற்கும் உறைவிடத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவைகட்குரிய அனுமதிச் சீட்டுக்களை சமாஜப் பொதுக் காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளவும். ஏனைய அன்பர்கள் உணவிற்கு நாள் ஒன்றுக்கு ரூபா ஒன்று செலுத்த வேண்டும்.

சமாஜத்தில் உறுப்பினராகச் சேர விரும்பும் அன்பர்கள் மாநாட்டில் பணம் செலுத்தி உறுப்பினர்கள் ஆகலாம். ஆண்டுச் சந்தா ரூபாய் மூன்று.

திருமுறை பாராயணம் நடைபெறும். வேறு சில சொற்பொழிவுகள் காலைவேளைகளில் நிகழக் கூடும். கடிதங்கள், தீர்மானங்கள் நேரே செயலாளருக்கு எழுதவும். பெண்ணகடம் ஒரு அஞ்சல் நிலையம்.

வாழ்க சீரடியாரெல்லாம்

சாது அச்சுக்கூடம், சென்னை-14

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாளியையுள் நாடு.

மலர் 29	துன்முகி மார்கழி 1956 டிசம்பர்	இதழ் 12

இயற்கையின் ஆற்றல்

ஆசிரியர்

1. இயற்கையின் அமைதி: இயற்கை ஒப்பற்ற அமைதியைப் பெற்றிருக்கிறது. அதனை நினைக்கும்போது எல்லாம் பெரும் வியப்பை அடைகிறோம். அதனை ஆராய ஆராய நுண்ணிய மர்மங்களை அறிகிறோம். அவ்வமைதியின் ஒழுங்கைக் காணும்போது எல்லாம் பெருமிதம் அடைகின்றோம். அதனுடைய விதிகள் எத்தனை நுட்பத்தோடு ஒழுகுகின்றன என்று கூறவும் வேண்டுமா ? இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்ட கலைவல்லோர்கள் அதன் எல்லையில் ஒரு சிறு கூறும் இன்னமும் எட்டிப் பார்க்கவில்லை. முழுவதும் பார்க்க முடியுமோ அறியோம். தற்போது கண்டுபிடித்துள்ளவையே அதிஅற்புதமாக இருக்கின்றன. முழுவதும் கண்டுபிடித்துவிட்டால் என்ன வகையான முழு வியப்பு ஏற்படுமோ அறியோம். மிக நுண்ணிய அணு முதல் மிகப் பெரிய அண்டகோளம் வரையில் உள்ள ஒவ்வொரு பகுதியும் என்னென்ன அற்புதத்தைக் கொண்டு விளங்குகிறதோ யார் அறிவார். இந்த அரிய நிலையில் இயற்கை இருக்க அதன் பகுதிகளையும் ஆற்றல்களையும் எழில்களையும் திட்டங்களையும் அறிந்து பயன்படுத்திக்கொள்ள மனிதன் முயல்கிறான். இது பேதமை அல்லவா ?

2. இயற்கையின் பிரிவுகள் : பொதுவாக இயற்கைப் பொருள்களை இரண்டு பகுதிகளாக அறிஞர்கள் வகுத்திருக்

கிறார்கள். உயிருள்ளவை உயிர் அற்றவை என்பதே அப் பிரிவு. உயிருள்ளவை தோன்றிப் பெருகி அழியும் தன்மை களைப் பெற்றவை. எடுத்துக்காட்டுகள், மனிதன், விலங்கு, புழு முதலியன. உயிரற்றவையோ ஒரே நிலையில் உள்ளவை. தோற்றம், பெருக்கம், அழிவு அற்றவை. தாமாக இந்நிலை களைப் பெறாதவை. ஆனால் தீ, காற்று, இவைகளால் மாறு தல் அடையக் கூடியவை. அதாவது வெப்பம் முதலிய ஆற்றல்களால் அவை மாறுபாடு அடைவன. ஆனால் அம் மாறுபாடுகளால் உருவம் மாறுமே அன்றி அழிவு பெறாதவை. இவ்வித ஆற்றல்களை விரைவு, ஒலி, ஒளி, வெப் பம், இழுப்பு, மின் முதலிய திரிபுகளால் பிரித்துக் கூறுகிறார் கள். உயிர் உள்ள பொருள்களும் உயிர் அற்ற பொருள் களும் இந்த ஆற்றல்களால் ஆளப்பட்டு மாறுவன. உயிர் உள்ள பொருள் ஒருமுறை அழிந்தால் பிறகு உயிரற்ற பொருள் ஆகி அதன் குணங்களைப் பெறும். உயிரற்ற பொருளோ உயிருள்ள பொருளாக மாறினதைக் கண்டறி யோம். இவ்விரு சாரான பொருள்களின் சட்ட திட்டங் கள் எப்போதும் மாறாது ஒழுங்காக நடைபெறுகின்றன. அவ்வொழுங்கே ஒரு அற்புதத்தன்மை ஆகும்.

3. இயற்கையில் கோளாறு: இவ்வாறு இயற்கை யின் தன்மை இருக்க இதனில் கோளாறுகள் ஏற்படுவ துண்டோ என்ற கேள்வி உண்டாகலாம். இயற்கையின் சட்ட திட்டங்களோ ஒழுங்கானவை. கோடியில் ஒரு பங்கு கூட மாறுதல் அடையா. மனிதன் இயற்றுகிற சட்ட திட் டங்கள் அடிக்கடி பிசகி நடக்கும். ஆனால் இயற்கை நடத்தி வரும் சட்ட திட்டங்கள் எந்தக் காலத்திலும் மாறுதலோ பிசகோ இயற்றா. என்றாலும் ஒரோ ஒரு சமயங்களில் கோளாறுகள் ஏற்படுவது உண்டென விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மிகப் பெரிதான அண்ட கோளங்களில் ஏதாவது பிசகு ஏற்படுகின்றனவா? கதிர் மண்டலங்கள், ஒப்பற்ற ஒழுங்காக நடைபெறுகின்றன. நாள் மண்டலங் கள் கோள் மண்டலங்கள் ஒரு விநாடியும் மாறுபாடு அடைவதில்லை. நமது கதிரவன், திங்கள், செவ்வாய் முதலிய கோள்கள் ஆண்டாண்டுதோறும் சிறிதளவும் மாறுவ தில்லை. இருந்தாலும் அண்டகோளம் முழுதும் எடுத்து ஆராய்ந்தால் ஒவ்வொரு காலத்தில் சிற்சில புரட்சிகள்

தோன்றுகின்றனவாம். விண் வீதியில் திடீரென்று எரி உடுக்கள் தோன்றி மறைகின்றன. இவைகள் தங்கள் இயற்கைப் பாதைகளைவிட்டு விலகியபடியால் எரிக்கப் பட்டுப் போயின காட்சிகளாம். ஒவ்வொருகால் ஒன்றி ரண்டு அண்டங்கள் முட்டிக்கொண்டு அழிகின்றனவாம். அப்போது பெரிய உற்பாதம் உண்டாகும். இவ்வாறு அண்டகோளத்தில் ஏற்படுவதைப்போல் பிண்டத்திலும் உண்டோ எனக் கேட்கலாம். அங்கேயும் அருமையாக ஏற்படும். அணுச்சக்தியினல் ஒருவேளை அவைகள் வழி பிறழ்கின்றன. அவைகளால் எண்ணஒண்ணுத் தீங்கு ஏற் படக்கூடும். இந்த வகையில்தான் பெரிய ஒட்டு நோய்கள் உலகில் தோன்றி உயிர்களை அழிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டில் பெரும் புயல்களும், வெள்ளங்களும் நில அதிர்ச்சி களும், நிலவுலகில் தோன்றுகின்றன. இவைகள் தோன்று வதற்குச் சில கோளாறுகளே காரணம் ஆக இருக்கலாம் அல்லவா ? அவைகள் என் நிகழ்கின்றன என்று ஒரு சிறிது ஆராய்வோம்.

4. **புவியின் இயற்கை :** நாம் வசிக்கும் புவி ஒரு அள விற்குள் அடங்கியது. விஞ்ஞானிகள் இதன் அளவை அளந்து தந்திருக்கிறார்கள். உருண்டை வடிவான இப்புவி மண், நீர், காற்று, விண் இவைகளால் ஆக்கப்பட்டது. மண்ணும் நீரும் ஒரு உருண்டை அளவில் தங்கி இருக்கக் காற்றே மேலே பரவி நில மட்டத்திற்கு மேலே 200 கல் உயரம் மட்டும் பரவி இருக்கிறது. இந்த அளவிற்கு உள்ளேயே நிலத்தினுடைய செயல்கள் எல்லாம் நடை பெறுகின்றன. இந்த அளவிற்குள் இருக்கும் பொருள்கள் இந்த எல்லையைவிட்டு வெளி ஏறுவதில்லை. அழிவதும் இல்லை. மாறுபாடுதான் அடையும். பொருள்களுடைய மதிப்பு எடையினல் அளக்கப்படுகிறது. ஆகவே இந்தப் புவிக்குச் சேர்ந்த பொருள்களின் மதிப்பு முற்றும் ஒரு குறித்த எடை உள்ளவை. அந்தக் கன அளவு அல்லது எடை எப்போதும் மாறுவது இல்லையாம். ஆகவே புயல்கள் வெள்ளம், நில அதிர்ச்சி முதலிய பெரும் நிகழ்ச்சிகள் எல் லாம் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டம்போல நிகழ்வன என்பர் விஞ்ஞானிகள். எடுத்துக்காட்டாக மழையை எடுத் துப் பார்ப்போம். கடல்நீர் வெப்பத்தினல் ஆவி ஆகி விண்

ளில் ஒரு எல்லைக்குள் நிலை நின்று குளிர் காற்றினால் நீர் ஆகி மழையாகப் பெய்து அதே கடலுக்குச் செல்லுகிறது. இந்த மாறுதலினால் யாதொரு குறைவோ மொத்தமாக உள்ள நீர்ப்பரப்பிற்கு ஏற்படுவதில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் பெய்யும் மழையின் அளவு ஒரே நிறையுள்ளதாகவே இருக்கும். ஓரிடத்தில் மழை அதிகமானால் மற்றோரிடத்தில் குறைவாக இருக்கும். ஆகவே மழையின் அளவு மாறுவது கிடையாது. குறுகிய அறிவும் பார்வையும் உடைய நமக்கோ மழை சில இடங்களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் பெய்கிறது என்று தோன்றும். ஆனால் மொத்த மழை ஒன்றே எனக் கூறவேண்டும். மழையைப் போலவே எல்லா இயற்கை நிகழ்ச்சிகளும் ஒரே அளவிற்குள் அடங்கியவை என்று அறியவேண்டும்.

5. அரியலூர் வெள்ளம் : சென்ற திங்கள் இருபத்திமூன்றாம் தேதி விடிவதற்கு முந்தி திருச்சி வட்டம் அரியலூருக்கு அருகே மருதையாறு என்ற காட்டோடையில் பெரும் வெள்ளம் வந்து பாலத்தைத் தகர்த்து அவ்வழி சென்ற புகைவண்டியை வீழ்த்தி நூற்றுக்கணக்கில் யாதொரு பாவமும் அறியாத மக்களை மறுவுலகத்திற்கு அனுப்பிற்று. அதனைக் கண்டும் கேட்டும் மக்கள் திடுக்கிட்டார்கள். துயருற்றார்கள். சினமுற்றார்கள். இயற்கையின் கோளாறுகளை வெறுத்தார்கள். கண்டித்தார்கள். இந்தத் துன்பங்களும், துயரங்களும் எல்லாவற்றிற்கும் எதிர்பாராத பெரும் மழையே காரணம் ஆகும். சென்ற ஆண்டில் தஞ்சைத் திருத்துறைப்பூண்டிப் பகுதியில் ஒரு பெரும் புயல் தோன்றி உணவுப் பொருள் விளைவுகளை அழித்தது. வடநாடுகளில் கணக்கின்றிச் சேதம் விளைத்தது. தற்போது தமிழ்நாட்டின் இடையில் அளவுக்கு மிஞ்சி வேண்டாத காலத்தில் அது பெய்து அழிவு ஏற்படுத்தியது. இதனைத் தடுக்க முடியுமா என்பது கேள்வி. உயிர்ச் சேதத்தைத் தடுத்திருக்கலாம், மழையைத் தடுக்க முடியாது. தகுந்த முன்னறிவு தோன்றியிருந்தால் எதிர்பாராத வெள்ளத்திற்கும் திட்டங்கள் போட்டு அது சேதம் விளைவிக்காமல் தடுத்து அதனால் நன்மையும் விளைவித்திருக்கலாம். ஆனால் மழையைத் தடுத்து இருக்க முடியுமா என்பது கேள்வி.

மேலே கூறியபடி உலகில் ஒரு குறித்த அளவு மழையானது வெப்பதட்ப நிலையினால் பெய்தே தீரும். அது அரியலூரில் பெய்திருக்காவிட்டால் வேறு ஒரு ஊரில் பெய்தே தீரும். ஆனால் அதன் வேகத்தைத் தணிக்க மனிதன் முயற்சிகள் எடுத்துக்கொள்ள முடியும். வெள்ளம் வருமுன் அணைகோலிக் கொள்ளுதல் தமிழர் செயல்களுள் ஒன்றென நாட்டுப் பழமொழியே கூறும். அதனை முன்னிட்டு வேண்டிய ஏற்பாடுகள் அதிகாரிகள் செய்திருந்தால் நன்மையாகும். இல்லாவிட்டால் தீமையே ஏற்படும்.

6. தவிர்த்தல் உண்டா: இப்படிப்பட்ட பெரும் விபத்துக்கள் ஊழ்வினையால் உண்டாகும் என்பர். அவ்வாறு உண்டாகும் ஊழ்வினைகளைத் தடுக்கமுடியுமா என்றால் முடியும் என்று கூறுகிறார் திருவள்ளுவர். "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்று வெகு உறுதியாக அவர் கூறுகின்றார். ஒரு கேள்வி கேட்கக்கூடும். 63 பேர்கள், (நாயன்மார்களைப்போல) ஒரு குழுவாகக் கூடி யாத்திரை சென்றார்கள். இராமேசுரம் செல்ல எண்ணிச் சென்றார்கள். இவர்கள் எல்லாரும் ஒரே ஊழ்வினையால் தள்ளப்பட்டுச் சித்திரவதை அடைந்தார்களா? ஒருத்தி விருத்தாசலத்தில் இறங்கவேண்டி யிருக்க மெய்ம்மறந்து தூங்கி அரியலூரில் ஏன் இறந்தாள்? ஒருவன் மற்றொரு வண்டியில் ஏற இருந்தவனை ஒரு நண்பர் இந்த யமவாதனை வண்டியில் ஏற்றிவைக்க அதில் போய் இறந்தார். இன்னும் இவ்விதமான எத்தனையோ பரிதாபகரமான நிகழ்ச்சிகள் நடந்தன. இதனைத் தடுத்திருக்க முடியும் என்று மக்கள் நினைக்கிறார்கள், பேசியும் வருகிறார்கள்.

7. தீர்வு யாது: முன்னே கூறியபடி உலகில் இயற்கை யன்னையின் கருணையினால் உள்ள பொருள்கள் இருப்பிலும் அளவிலும் ஒன்றே ஆகி இருக்க, அவைகளில் ஏற்படும் மாறுபாடான விபரீதங்களே துன்பத்திற்கு ஏதுவாக இருக்கையில் அவைகளை ஒழுங்குபடுத்துவது மனிதனுடைய பகுத்தறிவின் முயற்சியேயாகும். இயற்கையன்னை மனிதனுக்கு அதற்குத் தீர்வு காணும் ஆற்றல் தந்திருக்கின்றாள். அதனைத் தக்க வழியில் பயன்படுத்திக் கொள்வது மனிதனுடைய பண்பு ஆகும். இறைவன் இறைவியாகிய இயற்கை யன்னையின் மூலம் மனிதனை

ஆற்றல் படுத்துகிறன். மனிதன் அதனை அறிந்து அதன் பலனைக் கூடியமட்டும் பெற முயலவேண்டும். அமெரிக்கர் கள் 'தெரிசி'ப் பள்ளத்தாக்கை எந்த வகையில் அடக்கி ஆண்டு பயன் துய்க்கிறர்களோ அந்த வகையில் தமிழர் கள் ஊக்கம் கொண்டு முயலுவார்களாக. இந்த முறையில் நம்பிக்கை கொண்டு வீண் ஆகாயக் கோட்டைகளைக் கட் டிக் கொண்டு இராமல் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு இறை பணியில் நிற்பார்களாக.

நம் வாழ்வு நல்வாழ்வேயாக

இரா. கு. நல்லகுற்றுலம் பிள்ளை, இராசபாளையம்

பெருக்காற்று இடிகரை யொத்தது, நம் வாழ்நாள். இன்றுகொல், அன்றுகொல், என்றுகொல் என்னது; பின்னையே நின்றது கூற்றம். ஆதலால், நாம் நம் வாணுளை வீணுளாக்காது நன்றே வாழவும் வேண்டும். அந் நல்வாழ் வும், என்றும் பிணியணுகாத—கண்ணுங் கருத்துமழியாத வாழ்வாகவும், இன்ப அன்பைப் பெருக்கும் குணநலனும் மனநிறைவும் வாய்ந்த வாழ்வாகவும் அமைதல் வேண்டும்.

பிறர் உதவியின்றி—தனித்து, நம்மால் வாழவே முடி யாது. நாம் நல்வாழ்வு வாழ்தற்கும் பிறர் உறவும் உதவியும் நமக்கு வேண்டும். அதுபோல், பிறர் நல்வாழ்வு வாழ்தற் கும் நாம் உதவி வரவேண்டும். (Each for all, all for each.) அப்படி உதவவில்லை யென்றல், நம்மன்பைப் பெருக்குதற்கும் நமக்குத் தகுந்த வாய்ப்பில்லாது போய் விடும்; நாம் நல்வாழ்வு வாழ்வதென்பதும் முடியாது. அன்பு—நன்னயம் செய்தலே பகையையும் வெல்லவல்லது; நம்மன்பையும் மேன்மேலும் பெருக்கி அதனை அருள்மய மாகவும் மிளிரச் செய்வது.

நம் பகுத்தறிவும் சிற்றறிவே; என்றலும், அது அன் பின் வழியது உயிர்நிலை யென்பதனையும் அதன் பலநிறமாம் காதல், அருள், பக்தி இவற்றின் சிறப்பினையும் நமக்கு நன்கு உணர்த்திக் கொண் டிருக்கின்றது. அப்படியிருந்தும், நாம் அவற்றை நம் வாழ்க்கையின் அடிப்படையாகக்

கொண்டு வாழ்கின்றோமில்லை. அன்பே சிவமாம்—கடவுளாம் என்பது நம் கருத்துமாக, அதனை நாம் நம் வாழ்க்கைப் பழக்கமாகக் கொண்டிட வேண்டும்.

தாய் தன் குழந்தைக்கு பாலோ சோறோ ஊட்டும்போது, அதனைமட்டும் ஊட்டுவதில்லை; அதனோடு அன்பையும் குழைத்து, கைம்மாறு கருதாக் கடப்பாடாக ஊட்டுகிறாள். பின், தகப்பனையும் குழந்தைக்கு அறிமுகம் செய்கிறாள். அவர்களிருவரும்—அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வமாக, காணாத தெய்வத்தையும் அதற்கறிவுறுத்தி நற்பண்புகளையும் வளர்த்து வந்தனர். இப்படியாக, குடும்பம் அன்பு (Affection) உருவாகும், வளரும் இடமாக இருந்து வந்தது. உரித்தோடு குடும்பத்தில் வளர்ந்த அன்பு, பின்பு பள்ளியில் நட்போடு படர்ந்தது. பழங்கால ஆசிரியர்களும் நற்பண்புகளைப் பின்னும் கட்டுப்பாடாக வளர்த்து வந்தனர்; நல்லொழுக்கம் அமைவதற்காவனவும் செய்து வந்தனர். இப்படியாக வளர்ந்தவர்களில் சிலர், பிற்கால வாழ்க்கையில் தங்கள் செயலிலெல்லாம் அன்பைப்பெருக்கி, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகவும் திகழ்ந்தனர்.

நாம் எத்துணை அறிவுடையராக—பகுத்தறிவுடையராக இருப்பினும், நம் மனக்குரங்கை நாமடக்கி யாளாவிட்டால், அது நம்மைப் பேயாட்டங் கண்டுவிடும்; ஆதலால் நாம் அதனை யடக்கியும் நம்மைத் திடப்படுத்தியும் செம்மையாக வாழ்தற்கும், நம்மறிவைப் பெருக்கி வருதற்கும் நம்மிலும் சிறந்த அறிவும் ஆற்றலும் படைத்த அன்பர்கள் துணை நமக்கு வேண்டும். நன்மையாம் உண்மையும், தீதொரீஇ நன்றின்பாலுய்க்கும் அறிவும், இறவா இன்ப அன்புந் திரண்டு சச்சிதானந்தம் (உண்மை யறிவின்பம்) ஆக விளங்கும் அம்மையப்பனே நமக்கு ஒரு சிறந்த தோன்றாத் துணையாவான் என்றும், அவனை நாம் தமராகக் கருதின், அவன் நம்மகத்துக் கோயில்கொண்டு, நம்முயிராகி, உணர்வாகி, பிரிவிலாத் துணையாய் நம்முடனிருந்து, யாவற்றையுமறிந்து, நல்லனவுந் தீயனவும் நமக்குக் காட்டா நிற்பான் என்றும், நமக்குப் பெரும்பயனளிப்பான் என்றும் நம் சமயத் திருமுறைகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. நாம் அவற்றையுணர்ந்து, அவன் வழியே நின்று நற்பணிகளிலமர்ந்தும், நம் ஐம்புலன்களையும் நிய

நெறியில் செல்லவிடாது பொய்நீர ஒழுகியும், தூயநீராடித் தூசுடையணிந்தும், அகமும் புறமுந் தூயராய், அகனும் முகனும் அமர்ந்த இன்சொலராய், அன்பர்பணி—பிறர்க் குதவி செய்துவரின், பழுதிலா மனநிறைவும் இறவா இன்ப அன்பும் தாமே நம்மை வந்தெய்தும், பெருகும்.

நம் சமயமட்டுமல்ல ; நம்நாட்டுப் பிற பழஞ் சமயங் களும் சமயப் பிரசாரம் செய்வதில்லை ; சமயக் கல்வியும் பயிற்றுவிப்பதில்லை ; சமயப் பெரியார்களும் மற்றும் தலை வர்களும், சமய விளைவாக மக்களிடையே காணவேண்டிய ஒழுக்கம், ஒப்புரவு, ஒற்றுமை சீர்குலைந்து போயிருப்பதை யும் உணர்வதில்லை. நமக்கொரு கடவுள் என்? வேண்டாம், இல்லையென்பாரும் பெருகிவருகின்றனர். கடவுள் உண் டென நினைப்பவரிலும் பெரும்பாலார், 'வெந்ததைத் தின் போம் ; விதி வந்தால் சாவோம்' எனக் கண்டதையும் கடியதையும் தின்றும் குடித்தும் மனம்போன போக்கிலே திரிந்தும் இறக்கின்றனர் ; பலர் சமயச் சின்னங்கள் அணி வதில்லை ; சிலர் அணியவும் அறியார். பெற்றோர்கள், ஆசிரி யர்கள் முதலிய பெரியாரின் முன்மாதிரியினாலும் நற் போதனையினாலும், நம் கோயில்கள், மடங்கள், சமாசங் கள், சபைகள் நடத்தும் விழாக்கள், கதா காலட்சேபங்கள், பசனைகள் மூலமாகவும் இவைகளும் சங்கங்கள், கழகங்கள், மன்றங்கள், கல்லூரிகள், பள்ளிகள், மாணவ விடுதிகள் முதலியனவும் நடத்தும் வார வழிபாடுகள், ஞாயிறு வகுப் புக்கள் (Sunday classes), சமயச் சொற்பொழிவுகள், பரிசுப் போட்டிகள் முதலியவற்றின் மூலமாகவும் விஞ்ஞா னத்திற்குப் பொருத்தமாகச் சமயக் கருத்துக்களை விளக்கி வெளியிடும் நூல்கள், துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும் நமக்குள் சமய உணர்ச்சி வேரூன்றி, தழைத்து, மேற் குறித்த குறைகளெல்லாம் குறையவேண்டும், நீங்கவேண் டும் ; எங்கும், நல்லொழுக்கமும் நிலவவேண்டும். நாமெல் லாரும் ஒருவர்க்கொருவர் உதவியாக வாழவேண்டிய ஒரே அம்மையப்பனின் பிள்ளைகள் என்ற உணர்ச்சியும் நமக் குள் வலுக்கவேண்டும் ; நாம் ஒற்றுமையாகவும் ஒருவர்க் கொருவர் உதவியாகவும் வாழ்ந்து வரவேண்டும். Love thy neighbour as thyself and help him as best you can. கடவுள் நியதிதான், இயற்கை நியதியும் ; ஆன்மீக

உலகிலும் இயற்கைச் சட்டமே (Natural law in the spiritual world) செய்தார்க்குச் செய்தவினை; வினைவிதைத் தவன் வினையறுப்பான் (Every action has its own reaction.) தெய்வம் நின்று கேட்கும்—மறு பிறவியி லேனும் கேட்காது விடாது. எளியாரை வலியாரடித்தால், வலியாரை வாயிற்படி யடிக்கும். ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கும். அழக்கொண்டதெல்லாம் அழப் போம். பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் (நினைக்கின்) தனக்கின்னா பிற்பகல் விளையும். கெடுவான் கேடு நினைப் பான். ஆதலால், நாம் மறந்தும் பிறன் கேடு சூழலுங் கூடாது.

நம் தமிழ்நாட்டில், பலர் பட்டினியும் பசியுமாக வருந்திக் கொண்டிருக்கும்பொழுது, ஒருசிலர் மட்டும் பணக்காரராக வாழ்ந்திடுவது அவ்வளவு நல்லதல்ல; அவர் களில் பெரும்பாலோர் உபகாரிகளாகவோ மற்றும் விரும் பத்தக்க முன் மாதிரியாகவோ வாழ்வதில்லை. அதனால், நம் நாட்டில் நல்லெண்ணத்திற்கும் பஞ்சம் வந்துவிட்டது. பிறர் வாழப் பிடியாமை—பொறாமையும், பிறர்நலனைக் கெடுத்தேனும், பிறர் உடலை ஊறு செய்தேனும், பிறர் உயிரையே வாங்கியேனும் பிறர் பொருளைக் கவர்ந்து பணக்காரராகிவிட வேண்டுமென்ற துராசையும் பெருகி வருகின்றன. வெறிக் குணமும் நம் நாட்டில் மிகுந்து அற்ப சச்சரவுகளும் வேற்றுமைகளுங்கூட கொலைகளில் முடிகின்றன. இவையெல்லாம் மாறவேண்டும்.

வாணிபத்திலும் மற்றும் தொழில்களிலும், பிறரை அரட்டியும் வஞ்சித்தும், பிறர்க்குத் தீதிழைத்தும், பிறர் உழைப்பின் ஊதியத்தைக் குறைத்தும், தன் திறனுக்கும் உழைப்புக்கும் கூடுதலாகக் கவர்ந்தும் பொருள் தேடலும் இவைபோன்ற பிற சுரண்டல் (Exploitation) களும், 'வேண்டற்க, வெஃகியாம் ஆக்கம்' என்னும் நம் தமிழ் மறையை மீறிச் செய்வனவேயாகும்.

நம் தமிழ்நாடு, கொஞ்சமும் முன் யோசனை (Far-sightedness) இன்றி வலையில் சிக்கிய புறுக்கள்போல, வறுமையில் சிக்கிக் கடன்பட்டுக் கலங்கி நிற்கிறது. இந்த வறுமை ஒழியவேண்டும்; கடன் தொல்லை கழியவேண் டும். நாமொவ்வொருவரும் நம் வரவை நன்னெறியில்

பெருக்கியும், செலவைச் செட்டாக வரவிற்குள்ளடக்கியும் நம்மைத் திருத்தி வரவேண்டும்; பிறரையும் திருத்திவரத் தூண்டவேண்டும்; நம்மாலியன்றவரை, பிறர் திருந்துவதற்கும் நாம் உதவவேண்டும். தமிழன் வாழ்ந்தால் தான் அவன் சமயமும் தமிழும் வாழும். இதற்குத் தெய்வத் திருநெறிய தமிழும், அன்பு மிகு சைவ நன்னெறியும் பெரிதும் துணைசெய்யும்; அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் பிறக்கும்பொழுது கொடு வந்ததில்லை; பிறந்து மண்மே லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை. ஆகலின், செல்வமுடையார் இடை நடுவே தமக்குக் கிடைத்திருக்கும் - கிடைக்கும் செல்வம் பிறர்க்குதவுதற்காகக் கடவுள் தமக்குத் தந்ததென்று தேர்ந்து, பிறரெவர்க்கும் அவர் பசியாறுதற்கோ, சோம்பியிராது உழைத்துண்ணும் வகைக்குத் தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கோ தேவைப்படும் குறைந்த அளவு உதவியேனும் காலந் தாழ்க்காதும் கண்ணியமாகவும் செய்துவரவேண்டும். (மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று); மற்றவரும், தம் நிலைமையை, இது நமக்கிட்டபடியெனத் தேர்தல் வேண்டும். எவரும் தாழாது பலர்க்கும் பயன்படும் துறைகளில் முயன்று உண்மை நேர்மை குன்றாமலும், செம்மையாகவும் வாழ்வதோடு, தமவும் பிறவும் ஒப்பக் கருதும் உளத்திட்பத்தையும் - ஒப்புரவையும் வளர்த்துவரவேண்டும். அழுக்காறுடையார்க்கு அது சாலும்; அப்பாவி, திருச் செற்றுத் தீயுழியுய்த்துவிடும்; அதனால், புன்மாக்கள் நெஞ்சமும் புழுங்குவர். வேண்டாமை ஒரு விழுச் செல்வம்; ஆசைபடப்படத் துன்பம். சினம் ஒரு சேர்ந்தாரைக் கொல்லி. இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருக்கக் காய் கவர்ந்தற்றும். ஆதலின், நம் மன நிறைவைப் பெரிதும் பாதிக்கும் மேற்குறித்த அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இந்நான்கினையும் நம் மனத்தில் தோன்றாதும், தோன்றினும் வெளிவராதும் ஒழித்துவர வேண்டும்.

சுவரை வைத்துத் தான் சித்திரம் எழுதமுடியும்; உடல் நலமின்றேல், உழைப்பும் ஊக்கமும் தளர்ந்திடும்; மனநலமும் நீடிக்காது; மன நிறைவும் வாய்க்காது. அவ்வுடல் நலமும் பெரும்பாலும் நம்முணவைப் பொறுத்ததாக

இருக்கிறது. நல்ல பத்திய உணவு, நம்மைப் பிணியணுகாது காக்கவும் வந்த பிணியை அவிழ்தம்போல் நீக்கவும் குறைக்கவுங் கூடும். அது நம்முடலையும் மனத்தையும் நற்பண்பையும் வளர்த்துருவாக்கவும் கண்ணையும் கருத்தையும் அழியாது காக்கவும் கூடும். ஆகலின், நம் உணவு நமக்கு நல்வாழ்வு நல்கும் உணவாக அமைதல் வேண்டும்.

நம்முடலையும் மனத்தையும் சீரழிக்கும் குடிகளெதுவுமே - காபி, கோக்கோ, தேநீர்க் குடிகளும், சோடா முதலிய வாயுக் குடிநீர்களும், புகைக்குடியுமே கூடா. மலச்சிக்கல், சோம்பல், திமிர் முதலியனவற்றிற் கேதுவாகும் ஊனுணவும் உதவாது ; நம்முடலைப் பிணிக்கும் வாயு, கரப்பான், மூத்திரப்புளியம் (Uric acid) பண்டங்களையும் தாகத்தையும் மிகுதிப்படுத்துவன. நம்முட் கருவிகளை உறுத்துவன. வீக்குவனவற்றையும் நாம் கூடியவரை விலக்கவேண்டும், குறைக்கவேண்டும். நம்முடல் நலத்திற்கு இன்றியமையாத தெனினும் நீர் கோர்க்கும் உப்பையும் சர்க்கரையையும் கூடியவரை குறைத்தே சேர்த்துவர வேண்டும் ; வாதம், பித்தம், கபம் மூன்றினையும் அவ்வவற்றின் நிலையிலேயே நிறுத்திவரக் கூடியதாக சத்தானவற்றையே உண்பதிலும், அற்றதறிந்தே அளவறிந்துண்ணல் வேண்டும். நம்முடற் கழிவாகிய சிறுநீரும் மலமும் கூடுதல் குறைதலின்றியும் சிக்கலின்றியும் கழிந்துவர வேண்டும். இப்படியாக வாழ்ந்து வருபவர் உடல்நலம் குன்றாது - அதுவும் நீண்டகாலம் வாழ்ந்துவரும் பரம்பரையைச் சேர்ந்தவராயின், நீண்ட காலமும் வாழ்தல் கூடும்.

நாம் வாழும் இவ்வுலகம் போன்றே அதன் மக்களும் குற்றங் குறைகளுடையவர்களாக இருக்கின்றனர். நாம் பிறரோடு உறவாடாமல் வாழவே முடியாது. ஆகலின், குற்றங் குறைந்து குணம் மேலிடும் அன்பர் உறவையே நாம் நாடுதல் வேண்டும். அவர்தம் நற்குணங்களையும் நற்பழக்கங்களையும் நாம் பின்பற்றி வரலும் வேண்டும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர், உழைப்பால் உயர்ந்தார், தூயவாழ்வால் சிறந்தார் முதலியோரின் வாழ்க்கைப் பண்பு, அறவுரைகள், அறிவுரைகள் அறிந்தும் சிந்தித்தும் அவற்றை நம்மியல்பிற் கேற்பக் கடைப்பிடித்தும் வரவேண்டும். இப்படியாக, நாம் கையாண்டு வரும் நற்குணங்களை

யும் நற்பழக்கங்களையும் சிதையாது வளர்த்து வருதற்கு நல்லாரிணக்கம் - நேரடி உறவு கூடுமானால் அதுவும், எப்படியும் அவர் தம் வாழ்க்கைப் பண்பும் கற்பனைகளும் அறிந்து அவற்றில் தோய்வதற்கான வாய்ப்பும் நமக்கும் இடைவிடாது இருந்துவரவேண்டும்.

நாம் கருதாதிருப்பினும், நம்மிலும் நமக்கினியனாக எப்பொழுதும் நமக்கு உதவுபவன் ஈசன் ஒருவனே. அவன் அன்பினில் விளைந்த ஆரமுது. அவன் நம் பொல்லாவினையை - பாவத்தை யறுப்பான்; நம் பிழையைப் பொறுப்பான்; பிழையெலாந் தவிரப் பணிப்பான்; பொன்னும் மெய்ப்பொருளும் தருவான்; ஆனால், பிறரைப் பேறுதாரைப் பேறான். அவன், தன்னை நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரிவான். ஆதலால், நாம் அவனை வேலையிலும் விளையாட்டிலும், நினைவிலும் கனவிலும், எப்போதும் நினைத்தும், அவனருட் குணங்களைச் சிந்தித்தும், போற்றிவர வேண்டும். அவனருள் நெறியே நாமும் செல்லுதல் வேண்டும்; அவன் அடியார்க்கும், அற்றார் அலந்தார்க்கும் அருளுவதுபோல, நாமும் பிறர்க்குதவுதல் வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் உண்பதும் உறங்குவதுமாகவுள்ள குடும்பங்களிலும் விடுதிகளிலும் அவ்வாறு உறங்கப் போவதற்கு முன்னும் விழித்தெழுந்தும் அவனருட் குணங்களைப் போற்றிக் கீர்த்தனங்கள் பாடியும், உணவருந்துமுன் அவ்வாறே அவன் கருணைக்கு நன்றி செலுத்தியும் வரவேண்டும். நாமொவ்வொருவரும் இரவில் உறங்கப் போகுமுன், அன்று நாம் பொல்லா வினைகள் செய்திருப்பின் அவற்றிற்காக நாம் உளம் வருந்தி அவற்றைப் பொறுத்தருளும்படிக்கும், மீண்டும் அவற்றைச் செய்யாதிருக்கத் திடம் தரும்படிக்கும் கேட்கவேண்டும்; விழித்தெழுந்தும், அன்றெல்லாம் நம்முடனிருந்து நமக்கு நல்லறிவு புகட்டி நம்மைக் காப்பாற்றிவரவேண்டிக் கொள்ளவேண்டும். நம் வேண்டுகோளின்படியே, அவன் நம்முடனிருந்து வருவதையும் நாம் உணர்ந்து நம் நினைவிலும் பேச்சிலும் செயலிலும் தூயராயும் உண்மையாளராயும் இருந்துவரவேண்டும். இப்படியாக, நாம் தெய்வத் திருநெறியைக் கடைப்பிடித்து நம்மைத் தேற்றித் திருத்தி

யும், நம் நிலைமையையும் அவனருட் குணங்களையும் அவனருள் பெற்றுய்ந்த அடியார் தம் சிறப்புக்களையும் நாம் நித்தலும் சிந்தித்து அவனருள் நெறியில் நம்மைத் திண்ணியராக்கியும் வந்தால், இந்நிலவுலகிலேயே நாம் சீவன்முத்தராகத் திரியலாம். இதுவே எவரும் விரும்பத் தகும் மிக மிகச் சிறந்த நல்வாழ்வாகும். He works the work of God even if he knows not God, who works unselfishly for a good end.—Francis William Newman. மேன்மையாம் சைவ நன்னெறியைப் பரப்புக உலகமெங்கும்.

---

12 ஜோதிர்லிங்கத் தலங்கள்

தி. கி. நாராயணசாமி

வட நாட்டு யாத்திரையில் தீர்த்தச் சிறப்பே அதிகம். 1கங்கை, 2கிருஷ்ணை, 3கோதாவரி, 4சபர்மதி, 5சரயு, 6தபதி, 7துங்கபத்ரா, 8நர்மதை, 9பல்குனி, 10பீமா (சந்திரபாகா), 11யமுனை, 12க்ஷிப்ரா, 13ஸ்வர்ணபத்ரா, 14கோமதி, 15இரண்யாகபிலம் நதிகளில் நீராடித் திளைத்தலை அடிப்படையாக வட நாட்டு யாத்திரை அமைந்துள்ளது. அந்நதிகளின் சில துறைகளில் மூர்த்திச் சிறப்பு இல்லை.

வடநாட்டில் *தேவாரம் பெற்ற தலங்கள் 5. அவை அனேகதங்காவதம் (கௌரீகுண்டம்), இந்திர நீலப்பர்ப்பதம், †கேதாரம், ‡கைலாயம், ஸ்ரீசைலம் என்பன.

அந்தந்த நதியில் நீராடும் துறைகள் - ரயிலடிகள் :—1. அரித்துவாரம், காசி, பாட்னா, பிரயாகை, ரிஷிகேசம். 2. கிருஷ்ணை, விஜயவாடா. 3. இராஜமகேந்திரம், நாசிக், பஞ்சவடி. 4. அகமதாபாத், 5. அயோத்தி, 6. சூரத், 7. மந்திராலயம் ரோட், 8. ஒங்காரம், ப்ரோச், 9. கயா, 10. பண்டரீபுரம், 11. ஆக்ரா, கோகுலம், பிரயாகை, பிருந்தாவனம், மட்ரா, 12. உஜ்ஜயினி, 13. சோன், 14. துவாரகை, நைமிசாரண்யம் (நேமிஷார்), 15. சோமநாதபுரம் (பிரபாச பட்டினம்).

*திருக்கேதாரயாத்திரை - அவிநாசிலிங்கம் செட்டியார், தருமபுர ஆதீன வெளியீடுகள் படிக்கவும்.

†இராமகிருஷ்ண மடத்துத் திருக்கைலாய யாத்திரை நூல் பார்க்கவும்.

ஸ்ரீசைலம் நீங்கலாக ஏனையவை இமயத்தில் பல இடங்களில் உள்ளவை. அவை சென்று காண்பது எளிதல்ல. முயன்றால் ஸ்ரீசைலம், கேதாரம், கௌரிகுண்டம் சென்று வரலாம். மற்றவை சென்று காண்பது அரிது. கண்டவரும் மிகச் சிலர்.

காசி பாடல் பெற்றத் தலமல்ல. வாரணாசி (காசி) க்ஷேத்திரக் கோவையில் (6-70-6) வைப்புத் தலமாக உள்ளது. வடநாட்டு யாத்திரைத் தலங்களில் பல வைணவச் சார்புடையன. அந்த யாத்திரையில் சைவச் சார்புடையன ஜோதிர்லிங்கத் தலங்களே. அவற்றில் பல நாமே நேரே நீரிட்டு மலரிட்டு வணங்கி வழிபடத் தக்கன. ஜோதிர்லிங்கம் 12 வருமாறு:—1. சோமநாதர், 2. ஸ்ரீ சைலநாதர், 3. திரியம்பகர், 4. மகாகாளர், 5. ஓங்காரர், 6. பீமாசங்கரர், 7. இராமநாதர், 8. குஸ்ருணேஸ்வரர், 9. நாகநாதர், 10. வைத்தியநாதர், 11. கேதாரநாதர், 12. விசுவநாதர். இவர்களில் இராமநாதர், ஸ்ரீ சைலநாதர், கேதாரநாதர் தேவாரம் பெற்றவர்கள். விசுவநாதர் அப்பர் அடிகளால் வைப்பாக வைக்கப்பட்டவர். இந்நான்குத் தலங்களின் விளக்கம், சைவத் தலயாத்திரை நூல்களில் காணலாம். ஏனைய எண்மரில் நால்வர் வடநாட்டு யாத்திரைப் பெருவழியிலிருப்பவர். அவர்கள் உஜ்ஜயினி மகாகாளர், ஓங்கார அலமேச்வரர், திரியம்பகேச்வரர், வைத்தியநாதர் ஆவர். எஞ்சிய நால்வரைக் (சோமநாதர், பீமாசங்கரர், நாகநாதர், குஸ்ருணேச்வரர்) காண யாத்திரையில் திட்டமிட்டால், செல்லும் நெடுவழியில், உற்றவிடத்தில் பிரிந்து விலகிச் சென்று காணலாம். இனி அவற்றின் தலவிளக்கம் வருமாறு:—

1. **குஸ்ருணேஸ்வரர்:** மண்பாட் சந்திப்பில் மாறி ஔரங்கபாத் சென்று பஸ்ஸில் 14 கல் சென்றால் புகழ் பெற்ற எல்லோரா குகை. அங்கிருந்து ஒரு கல் குஸ்ருணேஸ்வரம். குஸ்ருணம்—குங்குமப்பூ (மகாராஷ்ட்ர

---

‡அனேக தங்காவதம் 2/5. இந்திரநீலப்பருப்பதம் 2/17. இராமேச்சரம் 3/10, 3/101, 4/61. கேதாரம் 2/114, 7/78. கையிலாயம் 1/68, 3/68, 3/109, 4/47, 6/55, 6/56, 7/100. ஸ்ரீசைலம் 1/118, 4/58, 7/79.

மொழி). உமை சிவலிங்கத்தைக் குங்குமப்பூவினுல் செய்து வழி பட்டது என்பர். மூர்த்தி குங்குமப்பூ வண்ணர், பேரழகர். அமைதி தரும் வடிவழகர். சுவாமிக்கு உச்சியில் சல்லடைக் கண் (தாராபாத்திரம்) வழியாக நீர் கசிந்த வண்ணம் இருக்கிறது. கோயிலின் சிகரம், மண்டபம் சிறிது. ஆனல் உயர்ந்த சித்ர வேலைப்பாடு உடையது. எவரும் திருமேனியைத் தீண்டலாம்.

2. திரியம்பகர் : நாசிக்ரோட் ரயிலடியில் இறங்கி 4 கல் பஸ்ஸில் வந்து நாசிக் சேர்ந்து, திரியம்பகத்திற்கு 18 கல் பஸ்ஸில் போக வேண்டும். மலைபடிவாரம். அழகிய புதிய கோயில். பரந்த சுற்றிடம். ஆழத்தில் சிவலிங்கம். 3 ரோஜா மொட்டு போன்ற திருமேனிகள். மும்மூர்த்திகள். அடியில் எப்பொழுதும் நீர் எடுக்க எடுக்க ஊறிக் கொண்டே இருக்கும். அம்மலைமீது ஏறி 3 கல் சென்ருல் கோதாவரி ஆறு தோன்றுமிடத்தை அடையலாம்.

3. ஓங்காரர் : மோர்டக்கா ரயிலடியிலிருந்து 7 கல், ஓங்காரம். சிற்றூர். கயிலையிலும் சிறந்ததென்பர். நருமதை ஆற்றின்கரை. ஆற்றின் இரு கரையிலும் மலை. கோயிலுக்கு ஓடத்தில் ஏறி ஆற்றைக் கடந்து போகவேண்டும். குகையில் மேற்கு நோக்கி இருக்கிருர். அவரைச் சுற்றி நீர் ஊறி வருமிடத்து வெள்ளித் தொட்டி இருக்கிறது. நாமே திருமுழுக்கு ஆட்டலாம், அர்ச்சிக்கலாம்.

4. மகாகாளர் : க்ஷிப்ரா நதிக்கரையிலுள்ள உஜ்ஜயினி ஒரு ரயிலடி சந்திப்பு. முத்தித்தலம் ஏழினுள் அவந்திகா எனப்படுவது. அங்குள்ள மகாகாளரை நாமே நீராட்டி மலரிட்டு வழிபடலாம். அவருக்குப் பூசப்படுவது சுடுகாட்டு நீறு. வந்தவருக்கு வழங்குவதும அஃதே. விக்ரமாதித்தன், போஜன், காளிதாசன், பவபூதி, தண்டி, வரருசி பர்த்ருஹரி, வராகமிஸ்ரர் விளங்கிய இடம்.

5. சோமநாதர் : சூரத், ப்ரோச், துவாரகை செல்கிறவர்கள், பார்க்க எளிது. சோமநாதருள்ள பிரபாசபட்டினம் வீரவால் ரயிலடிக்கு 3 கல். பஸ் உண்டு. பூமிக்குக் கீழ், சுரங்கக் கோயில். மரகதச் சிலைபோல் மூர்த்தி ஒளிவிட்டுக் காட்சி தருவார்; கண்டார் மெய்சிலிர்க்கும். உள்ளம் உருகும். கஜினிமுகமது முற்றுகை இட்ட சோமநாதர்

ஆலயம், இதற்கு அருகில் மேற்குக் கடற்கரையில் தனியே இருக்கிறது.

6. **வைத்தியநாதர் :** பாட்னா—ஜஸித் சந்திப்பில் மாறி வைத்தியநாதத்திற்கு ரயிலில் வரலாம். ரயிலடியில் ஊர். பழமையான கோயில். கைலைநாயகரிடம் இராவணன் பெற்ற ஆத்மார்த்த இலிங்கமாம். இதனை இங்கு வைத்து வழிபட்டதாக வரலாறு. நதி இல்லை. கிழக்கு சந்நதி. சுவாமி உள்ளங்கை அகலம்; ஒரு அங்குல உயரம். இலிங்கத்தைச் சுற்றி ஆவுடையார் போல வரம்பு செய்யப்பட்டிருக்கிறது. மாலையில் சந்தனம், தங்க வில்வம், அக்கமணி சாத்தி, பெரும் குவியலாக வில்வமிட்டு, அக்குவியலை இலிங்கமாக அலங்கரித்துப் பட்டினால் கவசம் சாத்திப் பூசை நிகழும். எப்பொழுதும் யாத்திரை வாசிகளின் தீர்த்தக் காவடிகள் கூட்டம். அவரை நாமே நீராட்டி உள்ளம் குளிர வழி படலாம்.

7. **நாகநாதர் :** சௌண்டி ரயிலடிக்கு மேற்கே 14 கல்லில் உள்ளவர்.

8. **பீமாசங்கரர் :** பூனா அருகே நேரளம். அங்கிருந்து 8 கல் காண்டசம். காண்டசத்திலிருந்து 4 கல் சென்று மலை மீது இவரைக் காணலாம்.

நாகநாதரைப் பீமாசங்கரரை நேரே கண்டவர்கள் குறிப்பு கிடைக்கவில்லை. வணங்கிய அன்பர்கள் தெரிவிக்கவும். கங்கைக் கரையில் விசுவநாதர், கோதாவரிக் கரையில் திரியம்பகேச்வரர், நருமதைக் கரையில் ஓங்காரேச்வரர். முத்தித்தலங்களில் அவந்திகாவில் மகாகாளர், காசியில் விசுவநாதர். பஞ்சநாதத்தைச் சார்ந்தவை விசுவநாதம், சோமநாதம், இராமநாதம், வைத்தியநாதம் என்பன. கங்கை, கோதாவரி, நருமதை எழு புண்ணிய நதிகளைச் சார்ந்தவை. ஜோதிர்லிங்கத் தலங்கள் புண்ணிய நதிகளின் கரைகளில் சில; முத்தித்தலத்தில் சில இருப்பன குறிப்பிடத் தக்கது.

ஜகந்நாதம், கயா (விஷ்ணுபாதம்), பிரயாகை (அலகாபாத்) வைணவச் சார்புடையன. வடமதுரை நைமிசாரண்யம், துவாரகை, தேவப் பிரயாகை (கண்டங்கடிநகர்), கோகுலம் (ஆய்ப்பாடி), அயோத்தி, சாளக்கிராமம், நந்தப்

பிரயாகை (திருப்பிரிதி), பதரியாச்சிரமம் ஆழ்வார் பாடல் பெற்றவை.

முத்திதரும் தலமதாக, புண்ணிய நதியாய்ச் சிவனர் சடைமுடியை அணி செய்யும் கங்கையின் புனல் (தீர்த்தம்) உடையதாக, நாமே நீரிட்டு மலரிட்டு வழிபடும் ஜோதிர் லிங்க மூர்த்தியாக, அப்பரடிகளார் தேவாரத்தில் வைத்த பெருநியமாக, தனிப்பெரும் சைவச் சார்பு உடையதாகக் காசி இருப்பது சிந்திக்கத் தக்கது.

சைவத் தேர்வு விஞக்கள் - 1956

சைவப் புலவர் தேர்வு—சைவ இலக்கியம் 18-11-56

காலே 9 முதல் 12 வரை—மொத்த மதிப்பெண் 100—எல்லா விஞக்களுக்கும் சம மதிப்பெண்.

(1) முடிகையினுற்றெடு மோட்டுழவர் முன் கைத் தருக்கைக் கரும்பின் கட்டிக் கடிகையினுலெறி காட்டுப் பள்ளி, இலேமருதே யழகாக நாளுமிடு துவர்க்காயொடு சுக்குத் தின்னும் நிலேயமண்தேரர், மூவருமாகி இருவருமாகி முதல்வனுமாய் நின்ற மூர்த்தி, விழையாருள்ளம் நன்கெழு நாவில் வினைகெட வேதமாறங்கம் பிழையா வண்ணம் பண்ணியவாற்ருற் பெரியோரேத்தும் பெருமான், வேழம் வருமளவும் வெயிலே துற்றித்திரிவாரும், வரியாய மலராணும் வையந்தன்னே உரிதாய அளந்தானு முள்ளுதற் கங்கரியானு மறியாத கள்ளில்மேயான்—இவற்றிற்குக் குறிப்புரை எழுதுக.

(2) பிரமபுரத்துறை பெம்மானெம்மான் — இந்த ஏகபாதத் திருவிருத்த அடிக்கு நான்கு பொருள் எழுதுக.

(3) பெரிய புராணத்துள் திருநீற்றை நினைவூட்டும் உவமைகளுள் நான்கினை விவரிக்க.

(4) சில அற்புத நிகழ்ச்சிகளின் காரணங்களைச் சேக்கிழார் விவரிக்கும் முறையுள் நான்கினை விளக்குக.

(5) சமயப் பொருள்களை நினைவூட்டும் உவமைகளுள் சேக்கிழார் விவரிக்கும் நான்கினை விளக்குக.

(6) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே எனும் முடிபிற்குக் காட்டப்பெறும் காரணங்களுள் மூன்றினை விவரிக்க.

(7) சிவஞான தீபத்துள் முப்பொருளுண்மை பற்றிக் குறிக்கப்படும் பொருள்களைச் சுருக்கமாக எழுதுக.

(8) சுப்பிரமணியத்தைக் குறித்த வியாசத்துள் ஆறு முகங்களைப்பற்றிய நுட்பங்களைச் சுருக்கமாக எழுதுக.

சைவப் புலவர் தேர்வு—சைவ சாத்திரம் 18-11-56

மாலை 2 முதல் 5 வரை—மொத்த மதிப்பெண் 100—எல்லா வினைக்களுக்கும் சம மதிப்பெண்.

(1) சிவஞானபோத முதற் சூத்திரம் மூன்றதிகரணமாகப் பிரிக்கப்படும் காரணத்தையும் அவ்வதிகரணங்களின் நுட்பப் பொருள்களையும் 2 பக்க அளவில் எழுதுக.

(2) மூன்றும் சூத்திரத்தின் எழுதிகரணங்களின் உட்கருத்தை 2 பக்க அளவில் விவரிக்க.

(3) கேவலாவத்தை ஐந்துவகைகளையும் தெளிவாக விவரிக்க.

(4) ஒன்பதாம் சூத்திரத்து மூன்றும் அதிகரணத்துள் "அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டரனை" என்னும் உதாரண வெண்பாவிற் கூறப்படும் சிவோகம் பாவனை விவரங்களைத் தெளிவாக எழுதுக.

(5) பதினொராம் சூத்திரத்துட் கூறப்படும் காணுமுபகாரம் காட்டுமுபகாரங்களைத் தெளிவாக விவரிக்க.

(6) கடவுள் நிமித்தகாரணன் என்பதைச் சிவஞான பாடியம் எவ்வாறு விவரிக்கின்றது.

(7) ஒடுங்கின சங்காரத்தினல்லது உலகிற்கு உற்பத்தியில்லை என்பதைச் சிவஞானபாடியம் எவ்வாறு நிலை நாட்டுகின்றது.

(8) அத்துவிதம் எனும் சொல் இன்மை அன்மை மறுதலைப் பொருள்களுள் அன்மையையே கூறுவது என்பதை 2 பக்கங்கட்கு மேற்படாமல் விளக்குக.

சைவத் தேர்வில் இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்றவர் : வித்வான் - கு. சுந்தரமூர்த்தி, தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

மரபு - சைவ சித்தாந்த சாரம்

(முற்றொடர்ச்சி: மலர் 29 ; இதழ் 12 ; 512 பக்கம்.)

பலன் : ஞானசாரியர் திருமேனியில் நிகழ்கின்ற குறை குணங்களை இன்ன காரணத்தால் உண்டானதென்று ஆராய்ந்து அறியாமல் அவ்விடத்திலே எப்படி அக்குணம் நிகழ்ந்தாலும் அதை நாம் ஆராயலாகாது என்று அவ்விடத்தில் குணமாகவே கருதி, தற்புகழை விரும்பி இருந்து வாழ்வர்.

இனி அறிந்துசெய்த உண்மைச் சிவ நல்வினை நான்கில், அறிந்து செய்த உண்மைச் சரியை வருமாறு : அந்த உபாய வடிவின் ஒப்புருவில் அறிந்துசெய்த உபாயச்சரியை கூடுவதுபோல உண்மை வடிவிலும் கூடுதலாம். பலன் : இந்த உண்மைத் திருமேனிகொண்ட உலகத்தில் நன்மையாளரென்றும் பொறுமையுடையவரென்றும் தோன்ற வசிப்பர்.

அறிந்து செய்த உண்மைக் கிரியை : அந்த உபாய வடிவின் ஒப்புருவில் அறிந்துசெய்த உபாயக்கிரியை கூடுவதுபோல, இந்த உண்மை வடிவிலும் கூடுதலாம். பலன் : உண்மைத் திருவுடல் அருகில் முப்பொருள் விசாரணை உடையவரென்றும், யான் எனது என்பது அற்றிருக்கிறவர் என்றும் தோன்ற வசிப்பர்.

அறிந்து செய்த உண்மை யோகம் : இந்த உண்மை வடிவே பொருளென்று நம்பித் தியானம் பண்ணுவதாகும். பலன் : இந்த உண்மை வடிவின் இடமாகப் பிறந்து ஒறுப்பு, காப்புக் குள்ளாயிருந்து வாழ்வர்.

அறிந்து செய்த உண்மை ஞானம் : இந்த உண்மை வடிவின் காரணத்தையும் அதில் தோன்றிய குறை குணங்களையும் கேட்டுச் சிந்தித்து, நம்முடைய மலக்கிழங்கை இதுகாறும் ஐந்து வினை முதல்வர்களாலும் பிடுங்கப்படாமற் போனதால், நாம் முன்செய்த உண்மைச் சிவ நல்வினையினாலே இதுவே காரியமாக, அந்தப் பராசத்தியே இரங்கித் திருமேனி கொண்டதென்றும், அந்தச் சிவ நல்வினை ஏறுகின்றபொழுது நாம் அறிந்தும் அறியாமலும் நடந்த வழுவாமையும் வழுவுமே இந்த வடிவில் குறை குணங்களாக நிகழ்வதென்று தெளிந்து, நிட்டைகூடித் திருவடி சேர்வர்.

மேற்கூறிய சிவ நல்வினை பதினாறில் பதினைந்தும் மல நிலை. அறிந்து செய்த உண்மை ஞானம் ஒன்றே அருள் நிலை. இது தத்துவரூபம் முதலாகச் சிவபோகம் ஈருகப்

பத்துக் காரியமாயிருக்கும். அவற்றுள், தத்துவரூபம் : முப்பத்தாறு தத்துவத்தின் தொழிலை அறிதல்.

தத்துவ தரிசனம் : 36 தத்துவங்களைச் சடமென்று அறிதல்.

தத்துவ சுத்தி : அந்தத் தத்துவங்களைச் சிவ ஞானத்தினாலே அந்நியம் என்று அறிந்து நீங்குதல்.

ஆன்ம ரூபம் : தத்துவமுதல்வன் உயிர் என்று அறிதல்.

ஆன்ம தரிசனம் : உயிர் செயலற்றது என்று அறிதல்.

ஆன்ம சுத்தி : 36 தத்துவங்களைக் கொடுத்து ஒருவன் அசைக்க உயிர் அசைகிறது என்று அறிதல்.

சிவரூபம் : இப்படித் தொழிற் படுத்துகிறவனே திருவுடல் கொண்டு நிகைத்து நிற்கும் உயிரை ஒத்தொழுகி முப்பொருளையும் அறிவிக்கும் முதல்வன் என்று அறிதல்.

சிவதரிசனம் : இப்படி இரங்கி அவன் அவள் அதுவாகி நின்று உபகரிக்கும் தனது தொழிலையும் அறிவித்துத் திகைப்புத் தீர்த்து மோட்சமாக்கும் உண்மை வடிவைத் தேடிக் காண்டல்.

சிவயோகம் : இவ்வடிவின் அசைவின் வழியே நிற்றல்.

சிவபோகம் : இவ்வடிவே தானாகப் போதல்.

47. கன்ம பரிபாகி தன்மை : உடற்பற்று விடாமல், வேத ஆகமங்களை ஓதி அறுதியிட்டு அறிந்து நித்திய வினை ஒழுக்கங்களை வழுவாது கடைப்பிடித்துக் கோவிலே முக்கியமாக வழிபடுதலாம்.

48. மல பரிபாகி தன்மை : உடல்பற்று விட்டுத் திருவுடலைத் தேடிக்கண்டு, ஞான நூல்களை ஓதித், திருவாக்கைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டையைப் பொருந்துதலாம்.

49. மல பரிபாகம் : கதிரவன் தோன்றுங்காலம் இரவானது தன் சத்தியாகிய இருளில் சிறிது கெட்டு நிற்பது போல, உயிருடன் இருந்த ஆணவமலத்தின் தன்மையில், யான் எனது என்பது கெட்டு இருவினை ஒப்புக்காண்டல்.

50. சத்தி நிபாதம் : கதிரவன் ஒளியினாலே இருள் முழுவதும் கெட்டவிடத்துக் கண்ணானது மாயா பதார்த்தத்தைக் காண்டல்போல, மல சத்தி சிறிது நீங்கின உயிரில்,

மூன் கூடியிருந்த சிவசத்தி மிருந்து இருவினை ஒப்புக்கண்ட விடத்து உண்மைச் சரியை ஆதிய பொருளென்று அறிதல்.

51. இருவினையொப்பு : ஒரு இல்வாழ்வான் பரத்தையி னிடம் மயங்கி அவளுடன் வாழ்ந்துவருகிற நாளில், இல்லற நூல் கேட்டுப் பரத்தையினால் துன்பம் வருவதை அறிந்து அவளை வெறுத்து, தன் இல்லாளுடன் வாழ்ந்து வருகிற நாளில் துறவற நூல் கேட்டு இவளாலும் துன்பம் வருதலை அறிந்து வெறுத்து இருவரையும் ஒன்றாகக் காண்பதுபோல, தீவினை பிறப்பு இறப்புத் துக்கத்தைக் கொடுப்பதுபோல் நல் வினையும் பிறப்பு இறப்புத் துக்கத்தைக் கொடுப்பதை அறிந்து இருவினையும் சமமென்று கண்டு மறுத்தல்.

52. நிருவாண தீக்கை : உபய நிருவாணம், உண்மை நிருவாணம் என்று இருவகைப்படும். உபய நிருவாணமா வது, ஆகம அளவையின்படி கண், ஊறு, வாக்கு பாவனை, சாத்திரம், யோகம், ஔத்திரி என எழு தீக்கையும், ஐந்து கலா சோதனையும் மந்திர கிரியா பாவகமாகச் செய்து முடித்தல்.

உண்மை நிருவாணமாவது ஆனந்த விளையாட்டாகிய ஆணவ மலத்துடனே இரண்டற நிற்கிற உயிர்களுக்கு, அம் மலத்தை நீக்கிக் கறையேற்றவேண்டி யெழுந்த நாதவிந்து சத்தி, தனது நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந் தியாதீதம் என்னும் ஐந்து கலைகளினாலே, தனது பேத மான சுத்த மாயையில் ஐந்து தத்துவமும், அசுத்த மாயை யில் முப்பத்தொன்றும் ஆக 36 தத்துவத்தையும் காரியப் படுத்தி, இவற்றினாலே 224 சிற்றண்டமாகிய புவனத்தையும் காரியப்படுத்தி, இவற்றினாலே 51 வன்னத்தையும் காரியப் படுத்தி, இவைகளினால் 81 பதத்தையும் காரியப்படுத்தி, இவற்றினாலே 11 மந்திரத்தையும் காரியப்படுத்தியது. இப் படிச் செய்திருப்பதாகிய ஒரு பேரண்டத்துக்குள் உயிர் களுக்குப் பிண்ட செயலாவது, அந்த மாயாதத்துவம் முப் பத்தாறினாலே உடலுண்டாய், இந்த உடலுடனே நெடுங் காலம் கேவல சகலப்பட்டு, இருவினைப் பயன்களைத் துய்த்து, கன்ம பரிபாகம் பிறந்த பின்பு சத்தி நிபாதம் பிறந்து, பின்பு இருவினை யொப்புக்கண்டு, பின்பு வேறு வினையாகிய சிவ நல்வினைப் பழுப்பினாலே இந்தத் திருவருளை திரு உடல் கொண்ட உண்மைவடிவு காட்சியான சாதகனுக்கு கம்

பிக்கை, பரிபாகம், நடுவு நிலைமை, புத்தி கூர்மை என்னும் நால்வகைத் திறத்தினலே மன வாக்குக் காயத்தினல் நான்கு பண்பு பிறந்திருப்பது கண்டும் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நான்கு பாதத்தையுடைய சத்திநிபாதம் பிறந்தகாலம் பார்த்தும் ஆறு நெறியும் சோதிக்கும்படி மாயா தத்துவத்துக்கு ஆதியான கலையை ஐந்து கலையாக்கி அதிலொரு கலையினலே மல நிவர்த்தி பண்ணுவது நிவர்த்தி கலை. அந்த மலசையோகியாய் இல்லை யென்னப்பட்டுக் கிடந்த உயிர்களை ஒரு கலையினலே உண்டென நாட்டுவது பிரதிட்டா கலை. அந்த உயிர்களுக்குப் பசு போதம் என்னும் அறிவை எழுப்புவது வித்தியா கலை. அந்த உயிர்கள் மலம் விடுக்கப்பட்ட தகைமைச் சாந்தம் பண்ணுவது சாந்தி கலை. உயிர்களுக்கு முப்பத்தாறு தத்துவத்தையும் சம்பந்தப்படுத்தி மருட்கேவலம் இரண்டும் நீங்கின அருட்கேவலமான முத்திக்காலத்தில் சுத்தாவத்தையின் காரிய அவத்தை ஐந்தில் துரியாதீதம் என்னும் சாக்கிராதீதப் படுத்துவது சாந்தியாதீத கலை. ஆக இப்படி ஐந்து கலையிற் பழகுவதினலே உயிர் முப்பத்தாறு தத்துவத்திலும் பழகும். இவற்றில் பழகுவதினலே 224 புவனத்திலும் பழகும். இப்புவனத்திற் பழகுவதினலே ஐம்பத்தொரு வன்னத்திலும் பழகும். இவ்வன்னத்திற் பழகுவதினலே எண்பத்தொரு பதத்திலும் பழகும். இவற்றில் பழகவே பதினெரு மந்திரத்திலும் பழகும். ஆதலால் பதம் எண்பத்தொன்றையும் சோதிக்கும்போது இதனலுண்டானது மந்திரம் பதினென்று என்று அறிந்து அவற்றை இகழும். இதனல் மந்திரங்களிற் கட்டுப்பாடான கன்மம் சுத்தியாம். இப்படியே புவனங்களைச் சோதிக்கும்போது அவற்றலுண்டான வன்னங்களில் கட்டுப்பாடான கன்மமும், தத்துவத்தைச் சோதிக்கும்போது அவற்றல் உண்டான புவனங்களிற் கட்டுப்பாடான கன்மமும், கலை ஐந்தையும் சோதிக்கும்போது இதனலுண்டான தத்துவங்களிற் கட்டுப்பாடான கன்மமும், அருளைச் சோதிக்கும்போது இதனலுண்டான கலைகளிற் கட்டுப்பாடான கன்மமும் சுத்தியாகும். இந்த ஐந்து கலையும் சுத்தியாகும்போது முன் சகலத்தில் விளக்கு நிழல்போல் நின்ற புருடமும் சுத்திப்படும். இப்படி ஆறு நெறியையும் சோதிக்கவே உயிர் மூலமலம் விடுதல்

கூடித் திருவருளைச் சேரும். இப்படித் திருவடி சேர்ப்பித்தல் உண்மை நிருவாணம் என்று அறிக.

53. ஐந்தெழுத்து வரலாறு : இது நுண்ணிய ஐந்தெழுத்து வரலாறு, பருமை(தூலம்) ஐந்தெழுத்து வாலாறு என்று இருவகைப்படும். அதில் நுண்ணிய ஐந்தெழுத்து வரலாறு ; தொன்மைக் கருவில் எழுந்த ஆனந்த ஏதுவாக உயிர்மலச் சேர்க்கையாய் அப்புறப்பட்டு நிற்றலால், உயிருக்கு "அ" ஆகிய சுட்டுப்பெயர் அகாரமாயிற்று. பின்பு அக்கருவில் எழுந்த அருள் ஏதுவாகக் கடவுள் இப்புறமும் அந்த அருள் ஏதுவாக மறைப்பாற்றல் உப்புறமுமாகி நிற்றலால், மறைப்பாற்றலுக்கு "உ" ஆகிய சுட்டுப் பெயர் உகாரமாயிற்று. ஆணவமலம் யான் எனது என்று நின்று அகங்காரச்சொல் பிறக்கும்போதெல்லாம் மகார ஒற்று ஓசையே பிறந்து நிற்றலால், ஆணவமலத்துக்கு ஓசைச் சுட்டாகிய பெயர் மகார ஒற்றாயிற்று. இப்புறப்பட்ட கடவுளாகிய நாதத்தின் அருட்சத்தி காரியப்பட்டுத் திரண்டு எழுத்துக்கள் பிறப்பதற்குக் காரணமாகி நிற்றலால், அந்தச் சத்திக்குத் திரட்சியாகிய சுட்டுப்பெயர் விந்துவாயிற்று. இப்படித் திரண்ட சத்திக்குக் காரணமாகிய கடவுள் நுண்ணிய நாதமாகி நிற்றலால், அந்தக் கடவுளுக்கு நாதமாகிய சுட்டுப்பெயர் நாதமாயிற்று. இது நுண்ணிய ஐந்தெழுத்து வரலாறாகும்.

பருமை(தூல) ஐந்தெழுத்து வாலாறு : முதலிலே உயிரின் சேர்க்கையான மலத்தைப் பரசிவம் "சீ" என்று வெறுத்தே நிற்றலால், இச்சிவத்திற்குத் தொழிற் பெயர் சிகாரமாயிற்று. மலச் சேர்க்கையான உயிரின் மலத்தை நீக்கி, உயிரைப் பராசத்தி "வா" என்று விரும்பியே நிற்றலால், இச்சத்திக்குத் தொழிற் பெயர் வகாரமாயிற்று. மலத்தின் செருக்கினாலே உயிர் யானே இறவான் என்று நிற்றலால், இவ்வுயிருக்குத் தொழிற்பெயர் யகாரமாயிற்று. உயிருக்குக் கட்டுற்ற காலம் எண்ணிறந்த சத்தியைக் கொடுக்கவும் முத்திக்காலம் எண்ணிறந்த சத்தியைக் கொடுக்கவும் அதிகாரி நான் என்றே மறைப்பாற்றல் நிற்றலால், இதற்குத் தொழிற்பெயர் நகாரமாயிற்று. ஆணவமலம் மறைப்புடன் கூடிச் சத்தியுண்டாய் உலகமெல்லாம் நமதென்று மமதையே செலுத்தி நிற்றலால், இந்த ஆணவமலத்

திற்குத் தொழிற்பெயர் மகாரமாயிற்று. ஆக 'சிவாயநம' என்று ஐந்தெழுத்தாயிற்று.

54. ஞானி தன்மை : உடல் நீங்கல், அந்தியேட்டி, இருப்பு வினையின்மை ஆக மூன்றும் ஞானியின் தன்மை. இதில் உடல் நீங்கலாவது பத்துக் காரியத்துள் தத்துவ சுத்திப்படுத்தல். அந்தியேட்டியாவது பத்துக் காரியத்துள் சிவ யோகத்தில் நிற்றல். இருப்புவினை இன்மையாவது பத்துக் காரியத்துள் சிவக் காட்சிப்படுதல். தீக்கைபெற்று அதனால் உயிர் திருவருளை மேலிட்டு மல அறிவு நீங்கிச் சிவ அறிவானதால் ஞானிக்கு இருப்புவினையில்லை. இது ஒருவன் பல ஊரையேற்று மணியம் பண்ணுகிறபோது அவன் பயிரேற்றிப் பறித்தடித்துவைத்த கட்டுக் கிடையெல்லாம், புது மணியகாரன் வந்தவுடனே பழைய மணியகாரன் கையாட்சி பண்ணப்படாமற் போவதுபோலாம்.

55. உடல், திருமேனி வருதல் : மலப் பிணியால் உயிருக்கு உடல்வந்தது. உயிரின் மலப்பிணியைத் தீர்க்குங் கருணையால் கடவுளுக்குத் திருமேனி வந்தது.

56. உலகத்தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணம் : உயிரானது உயிர் அறிவுடனே ஒடுங்கினாலும் சிவமானது சத்தியினிடத்திலே ஒடுங்கினாலும் உலகம் உண்டாகும். உயிர் அறிவானது உயிரினிடத்திலே ஒடுங்கினாலும் சத்தியானது சிவனிடத்தில் ஒடுங்கினாலும் உலகம் ஒடுங்கும்.

57. கெட்டு முத்தி : உயிர் முத்தி அடையும்பொழுது தான் கெட்டு அடையுமோ? கெடாமல் அடையுமோ? உயிர் கெட்டால் சடமாகிப்போகும். முத்தி வேண்டுவ தில்லையாம். கெடாதிருந்தால் உயிர் ஆணவமலத்தைவிட்டு நீங்காது. இவ்விரண்டும் இல்லாததால், கண் இருளோடு சேருந் தொழில்கெட்டுக் கதிரவன் வந்தவிடத்து ஒளியோடு சேர்வதுபோல, விடயத்தின் வழித்தாய்த் துய்க்கின்ற மல அறிவாகிய உயிர் அறிவின் தொழில்கெட்டு முத்தி அடையும்.

58. உலகத் தோற்ற ஒடுக்கம் : அபரநாதமும் அபர விந்துவும் முதலில் மிக நுண்ணிய ஐந்து பருப்பொருள் தேவதையை உண்டுபண்ணி, அதற்கு நுண்ணிய உடலையும் பருவுடலையும் கொடுத்து, மண்ணின் கூறாக 224 சிற்றண்ட

மும், நீரின் கூறாக 224 சிற்றண்டமும், தீயின் கூறாக 224 சிற்றண்டமும், காற்றின் கூறாக 224 சிற்றண்டமும் உண்டு பண்ணி, ஒவ்வொரு சிற்றண்டத்துக்கும் ஒவ்வொரு பஞ்ச கர்த்தாக்களையும் உண்டுபண்ணி வைத்து, மண் முதலான ஐந்துவகைப் பிரமாண்டத்திற்கும் அந்தந்த மிக நுண்ணிய பருப்பொருள் தேவதை காவலாக அமைத்திருக்கும். பின்பு சதாசிவமூர்த்தி ஆயுளிறுதிக் காலத்தில், ஐந்து வினை முதல்வர்களும், ஐந்துவித அண்டங்களும், ஐந்து பருப்பொருள்களும் தோன்றின அடைவே ஒடுங்கும்.

59. முத்தி வழி : உயிருக்கு முந்தினது சிவ நல்வினைக் காரணம். அதன்பின் பக்குவம். அதன்பின் சிவ நல்வினை. பின் மல பரிபாகம். அதன்பின் சத்திநிபாதம். அதன்பின் திருவுளம்பற்றிய ஞானநூல் முதலிய திருவாக்கைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடி முத்தி அடைதல். இதுவே முத்திவழி.

" குருவருள் "

வித்வான் - இராமசாமியடிகள்

" அரிதரிது மானிடராதலரிது " என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு. பல பிறவிகளில் செய்த நல்வினையால் இவ்வுடம்பைப் பெற்றிருக்கின்றோம். இவ்வுடம்பினைப் பெற்ற பயன் விலங்கினங்கள் போல் உண்பதும் உறங்குவதுமாகக் கழிவதற்கல்ல. நற்பணி புரிந்து, அறநெறியில் வாழ்ந்து, இறைவனருளைப் பெறுவதற்கே யாகும் என்பதை நூல்கள் தெரிவிக்கின்றன.

" மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காயம் ஆனிடத்தைந்து மாடும் அரன் பணிக்காக அன்றோ " என்பர் ஆன்றோர்.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றுள்ள நாம், பிறந்தது முதல் அருள்நிலை பெறும் வரை நல்லாசிரியர் துணையிலே வாழ்வதற்குரியவர்களாக இருக்கின்றோம். பொல்லாத

பாசப்பிணிகளாகிய தளைகளால் கட்டுண்டு ஐந்து புலன் களின் வழி மயங்கி, வருந்துகின்றோம். இதற்குக் காரணம், நில்லாதவற்றை நிலையினவென்று எண்ணிக் கொண்டிருக் கும் சிறிய அறிவுடையவர்களாக இருப்பதாகும். இவ்வறி வைச் சான்றோர்கள் புல்லறிவு என்று கூறுகின்றனர்; இப்புல்லறிவு நீங்கி நல்லறிவு பெறவேண்டுமானால் நாம் அற நெறியைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பிறந்தது முதல் தாய் கையில் தாலாட்ட, மடியிலே வளர்ந்தோம். அன்னையின் அமுதமொழி கேட்டு மொழி பயின்றோம். பின் தந்தை அறிவிக்கும் நன்னெறியிலே வளர்கின்றோம். வளர்ச்சியில் மொழி உணர்ந்து ஆன்றோர் காட்டிய ஒழுக்கம் இதுவென விளக்கமுற, மொழித்திறத் தின் முட்டறுக்கும் நல்லாசிரியன் அறிவுரைகளைக் கேட் டுக் கற்றவர்களாகின்றோம். கசடறக் கற்றபின் அறங் கூறும் நெஞ்சம் படைத்தவர்களாக வாழ விரும்புகிறோம். அறத்தை வலிவுறுத்தும் அறவோராது துணை நமக்கு வேண் டப்படுகிறது. வாழ்க்கைப் பாதை மிகவும் இடர்ப்பாடுடை யது. ஆதலின் அதில் செம்மையுடையவர்களாக வாழ்வதற்கு அன்பும் அறமும் நிறைய வேண்டும். அவை நிறைந்தால் தான் பண்பாளர்களாய்ப் பயன்பெற முடியும். அன்பை யும் அறத்தையும் நமக்குணர்த்தி, நமது வாழ்க்கை, பிறர் நலம்பேணி அருள்நெறிச் செல்வதற்கு அமைந்தது என் பதை அறவோர் விளக்கியுள்ளனர். வையத்துள் வாழ் வாங்கு வாழும் நெறிபடைத்த ஒருவன், இருள் நீங்கி இன் பம் பயக்கும் நன்னெறிக்குரியவன் ஆகின்றான்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியாக நந்தமி ழகத்தில் விளங்கிய தன்மையை ஒல்லும் வகையால் அறவினை யோம்பி, மனத்துக்கண் மாசிலனாகி அன்பும் அறனும் உடையவனாய் விளங்குதல் என்று வள்ளுவர் கூறுகின்றார். இதனை இளங்கோவடிகளும், கண்ணகி கூற்றாக “அற வோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க் கெதிர் தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை” என்று கூறியுள்ளார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறி படைத்தவன் பிறப்பென்னும் பேதைமை நீங்க விரும்புகின்றான். நில்லாத

வற்றை நிலையின வென்றுணரும் பேதைமை சிறிது சிறிதாக நீங்கி வருகின்ற அறநெறியைக் கைக்கொள்வோமானல் அன்பால் முதிர்ந்த அருள் வாழ்க்கைக் குரியவர்கள் ஆகின்ேறும். நம்மை மயக்கியிருக்கும் இருளின் தன்மையைப் போக்க என்னுகிறேம். வழிவழியாகப் பிறவிதோறும் மயங்கிடச் செய்த அவ்விருள் நீங்கி இன்பம் பெறுதற்கு; மாசற்ற நல்லறிவைப் பெற்றவர்களை அடைய வேண்டிய வர்களாகின்றேம். இந்நிலை அடைவதற்கு இறையருள் துணைவேண்டும்.

இதனைத்தான் மணிவாசகர், " அவனருளாலே அவன் ருள் வணங்கி " என்கின்ருர். அப்பரடிகள், " அவனருளே கண்ணுகக் காணின் அல்லால் " என்று கூறுகின்ருர். அவ னருள் துணையாக பிறப்பென்னும் பேதைமைத் தன்மைக் குரிய மயக்க அறிவு அழிந்து என்றும் விளக்கந் தருவாய்; விண்ணுலகும் தனக்கு அண்மையதாக விளங்குவதாய் உள்ள மெய்யறிவு கொண்டு சிறப்பென்னும் செம்பொரு ளாகிய சிவத்தை அறிதல் வேண்டும், என்று வள்ளுவர் வாக்கும் வழிகாட்டுகிறது.

அவனருள் குருவடிவாக வந்து நமக்கு வெளிப்படுத் தும் என்பதை, " ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தனை தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு அன் னியமின்மையின் அரன் கழல் செலுமே " என்று சமய இலக்கணமாகிய சிவஞான போதம் கூறுகிறது. புல னவித்து,மெய்யறிவுபெற்று விளங்குவதற்கு உணர்த்துபவர் குரு. கற்றதனலாய பயனைப் பெற அருள்பவர் குரு. குருவே சிவம். அவரே, உரையும் உணர்வும் அற்ற முழு முதற் பொருளாக விளங்குகிருர் என்பதை,

" குருவே சிவனெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோராய்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே "

என்று திருமந்திரம் கூறுகிறது.

——

விறகு சுமந்த வித்தகன்

கோவை - ச. கா. ரங்கம்

ஆலவாய்ப் பெருமான் குடிகொண்டிருக்கும் திருக்கூடலில் வரகுண பாண்டியன் என்னும் அரசன் அரசு புரிந்து வந்தான். அன்னான் இசை வல்லார்களுக்கு வேண்டிய சன்மானம் வழங்கி அத்தகையோர்களை ஆதரித்து வந்தான். இதனை யறிந்து வடநாட்டினின்றும் மதுரைக்கு ஏமநாதன் என்றொரு யாழ்ப்பாணன் வந்தான்.

"மன்றலந் தெரியன் மார்பன் வரகுணன் செங்கோ லோச்சிப்
பொன்றலங் காவலானிற் பொலியுநா ளேமநாதன்
என்றொரு விறல்யாழ்ப்பாணன் வடபுலத்திருந்தும் போந்து
வென்றிகொள் விருதினோடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்"

என்று பரஞ்சோதியார் பாடுகிறார். வந்தவன் சும்மா வரவில்லை. பலவகையான விருதுகளோடும் வந்து சேர்ந்தானாம். எங்கு வந்து சேர்ந்தான்? பலதிறத்து வித்தைகளில் தேர்ச்சியுடையவர்கள் வாழ்ந்திருக்கும்படியான மதுரைக்கு வந்து சேர்ந்தானாம். ஆகவே "விஞ்சை சூழ் மதுரை" என்றார். வந்த யாழ்ப்பாணன் அரச சபைக்குச் சென்று தன் யாழின் பெருமையை அரசனுக்குக் காட்டினான். அரசன் மிகவும் மகிழ்ந்து ஏமநாதனுக்குப் பல வகைச் சிறப்புக்கள் செய்தான். இதனால் ஏமநாதனுக்குச் செருக்குப் பிறந்தது. ஆகவே அவன் தன்னிலும் சிறந்த இசை வல்லார்கள் இங்கு இல்லை போலும் என்று எண்ணினான். இதனை மன்னன் உணர்ந்தான். அங்கு உள்ள பாணபத்திரன் என்னும் இசை வல்லானை அழைத்து நீ இசையில் வல்ல ஏமநாதனுடன் பாடுவாயோ? என்று கேட்டான். பாணபத்திரன் அரசே! உம்முடைய திரு உள்ளத்தின் வலிமையும், ஆலவாய் அப்பனின் அருளும் இருக்குமாயின் அந்த ஏமநாதனை வென்று, அவன் செருக்கினையும் அழிப்பேன் என்றான்.

"தென்னவர்பெரும யாழுன் திருவுள வலனுங் கூடன்
முன்னவனருளுங் கூட்டும் முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருதுவாங்கி யவனை வீறழிப்ப னென்றான்
மன்னவனுளைப்பாடு போகென வரைந்து சொன்னான்"

பின்பு அரசனின் ஆணைப்படி ஏமநாதனும், பாணபத்திரனும் நாளைப் பாடுவதென உறுதி செய்யப்பட்டது. அதற்கான அறிவிப்புகள் மதுரை யெங்கும் பரவின. 'வடநாட்டு இசைவல்லான் ஏமநாதனுக்கும் தென்நாட்டு இசைவல்லான் பாணபத்திரனுக்கும் நாளை அரச அவையில் யாழ் இசைப் போட்டி நடைபெற இருப்பதாக மக்கள் யாவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். அன்று பாணபத்திரன் கூடற்பெருமான் கோவிலுக்குச் சென்று, பெரும! என்பால் உன் அருள் நோக்கு விழக் கடட்டும். அடியேன் இசை வல்லவனாக இருப்பினும் உன் திருவுள்ளம் இல்லையாயின் என்னால் ஒன்றும் செய்ய இயலாது. வடநாட்டினின்றும் வந்த ஏமநாதனோ பலவகையான விருதுகள் பெற்றுள்ளவன். இசையிலே நல்ல தேர்ச்சியுடையவன். யாழிலே மிகுந்த வல்லமையுடையவன். இருப்பினும் அரசன் ஆணையால் அவனோடு போட்டி போட இசைந்துள்ளேன். எனக்குத் தோல்வி என்றால் அது மன்னனின் அவைக்களத்திற்குத் தோல்வி, மதுரைக்குத் தோல்வி, உன் அடியார் என்ற தன்மையில் அது உனக்கும் தோல்வியாகாதோ என்று பலவிதமாக அப்பனின் அருளைப்பெற வேண்டினான். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்றபடி, சோமசுந்தரக் கடவுளும் பாணபத்திரனது வேண்டுகோளுக்கு இணங்கினார். பாணபத்திரன் தன் இல்லத்திற் சென்று எப்பொழுது விடியுமோ எனக் காத்திருந்தான்.

"மையணி மிடற்றினானை மதுரை நாயகனை வந்தித்
தையனே யடியேற்கின்று னருட்டுணை செய்யல் வேண்டும்
மெய்யனே யென்று போற்றி வேண்டிக்கொண் டன்புதோய்ந்த
பொய்யறு மனத்தா னில்லம் புக்கினி திருந்தானிப்பால்"

இறைவனை இறைஞ்சி வகியதனால் இறைவன் அருந்துணை எப்படியும் தனக்கு உண்டு என இன்புற்றிருந்தான். அன்று இரவு ஏமநாதன் தான் விருதுகள் பெற்ற விமரிசையோடு

தன் இல்லத்தில் இன்புற்றிருந்தான். பாணபத்திரன் வேண்டுகோளுக் கிணங்கி அவனுக்கு உதவிபுரியும் பொருட்டுத் தான் ஒரு விறகாளாய் வடிவம் கொண்டு அந்தத் திருக்கூடல் வீதியில் நடந்து வந்தார். இறைவன் விறகாளாய் மாறினது மட்டுமன்றி தன் தலையின்மேல் ஒரு கட்டு விறகையும் சுமந்து வந்தாராம். அதை,

"தறித்த வித்தனந் தினந்தொறுந் தாங்கி நீள்பங்கி
பறித்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரித்து
மறித்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணு
தெறிந்த வித்தனச் சுமைதிரு முடியின் மேலேற்றி"

என்கிறார்.

அந்தச் செந்தழல்மேனியன் செறிந்த தலைமுடி யெல்லாம் உதிர்ந்து, பலநாள் தான் விறகு வெட்டி விற்றே தன் வாழ்க்கையை நடத்துகிறவன்போல, தன் தலை தேய்ந்து பள்ளமாகி இருக்கிறதாம். இந்தக் கோலத்தைத் தன் பங்கில் உறையும் உமாதேவியாரும், முடியில் உறையும் கங்கையெனும் மங்கையும் காணத் தரியாது துன்புறுவர் என்பதனால் அவர்கள் இருவரும் காணுதவாறு தான் மட்டும் தனித்து அந்தத் திருவீதியில் தள்ளாத நடையில் ஒரு கிழவன்போல் வந்து கொண்டிருந்தார். அந்த உருவம் எலும்பு தேய்ந்து இளைத்திருக்கும்படியான தோற்றமே படினும் கண்டவர் உள்ளம் இரங்கும்படியான இன்பு தோய்ந்த முகமாகக் காட்சியளிக்கிறதாம். அதை அப்படியே பரஞ்சோதியார் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"என்பு தோன்றியூ னின்றியே யிளைத்த யாக்கையராய்
அன்பு தோன்றியே கண்டவாகங் கனிந்திரங்க"

நடந்து வந்தார். அப்படி வந்தவர் ஏமநாதனின் வீட்டுத் தலைவாயிலை அடைந்தார். தான் சுமந்து வந்த விறகுச் சுமையை ஒரு பக்கத்தே ஊன்றி நிறுத்திவிட்டு நடந்துவந்த இளைப்பாறினார். சிறிதுநேரம் கழித்துச் சிறிது இசையை எழுப்பிப் பாடினார். இசையின் எழுச்சி ஏமநாதனின் காதுகளில் போய்ப் பாய்ந்தது. பாடுகின்றவர் யார்? என்று சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தான். பின்பு வெளியில் வந்து, இங்கிருந்து பாடுகின்ற நீ யாவன்? என்று வினவி

ஞன். அதற்கு அவர் நான் " பாணபத்திரனின் அடிமை " என்று சொன்னார். பிரமனையும், திருமாலையும், இந்திரனை யும் தனக்குக் குற்றேவல் செய்யும்படியாக வைத்திருக்கும் இறைவன் தான் "பாணபத்திரனின் அடிமை" என்று சொன்னாரென்றால் அடியவர்பால் இறைவனுக்கு இருக்கும் பெருங் குணத்தை அளவிட முடியுமோ ?.

வண்டறை கொன்றை யான்முன் வந்துநீ யாரை என்றான்
பண்டரு விபஞ்சி பாணபத்திரனடிமை யென்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன் மற்றேனை
அண்டருந்தன் குற்றேவ லடிமையாக் கொண்ட வம்மான்.

பாணபத்திரன் என்று மட்டும் சொல்லவில்லை. " பண்டரு விபஞ்சி பாணபத்திரன் அடிமை'' என்றாராம். இசையில் வல்லவனை பாணபத்திரன் என்று தன் அடியாருக்கு ஏற்றம் கொடுத்த இன்னம்பர் ஈசனின் அருந்திறம் நோக் கற்பாலது! அவ்வாறு கூறிய விறகாளை ஏமநாதன் பாண பத்திரனின் அடிமை என்றாயே நீ இவ்வாறு ஆனதற்குக் காரணம் என்னை என வினவினான். அதற்கு அவர், பல மாணவர்கள் பாணபத்திரனிடம் இசை பயிலுகிறார்கள். அவர்களில் நானும் ஒருவன். எனக்கு தசையெல்லாம் தளர்ந்துவிட்டதென்றும், வயது முதிர்ந்துவிட்டதென்றும், நீ இனி இசை பயிலத் தகுதியற்றவன் என்று என்னை நீக்கி விட்டனன். வேறு வழியின்றி இத்தொழில் செய்து வரு கிறேன் என்று கூறினார். ஏமநாதன் மிகுந்த ஆச்சரியப் பட்டு,

" மைவளந் தெரிந்த வேம நாதனும் விறகு மள்ளா
அவ்விசையொரு காலின்னம் பாடென வையன் பாடும் ''

ஐயனே! முன்பு பாடிய இசையை முற்றும் யான் கேட்க இன்னொரு முறைபாடு என்று அன்பு ததும்பக் கேட்டான். ஐயனும் பாடலுற்றான். அந்த இசையைக் கேட்ட மாத்தி ரத்தில் தான், என்னென்ன நிகழ்ச்சிகள்? சித்தரும் முத்த ரும் மயங்கினர். தேவர்கள் மயங்கினர். அயனும், மாலும், மயங்கினர். இன்னும் உயிர் உள்ள பொருள் கள் அத்தனையும் அந்தக் கானத்தில் மிதந்தன. அதுமட்டு மல்ல. உயிரற்ற சடப்பொருள்கள்கூட அந்த இசை

யின் எழுச்சியில் மயங்கிக் கிடந்ததென்றால் வேறு என்ன தான் சொல்ல இயலும் ?

“ வன்றரைகிழிய வீழ்போய் வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்களெல்லாஞ் செவியறி வுடையவாகி
மென்றளிரீன்று போது விரிந்து கண்ணீருஞ் சோர
நன்றறி மாந்தர்போல நகைமுகம் மலர்ந்த மாதோ ”

தாமரை மலர்களும் விரிந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்த தாம். ஓரறிவுடைய மரங்களும் ஆறறிவு படைத்தனவாகிச் செவிகளால் உணர்ந்து மயங்கிற்றென்றால் இறைவனின் கானம் எத்தன்மையதோ? எத்தகைய இசையை எமநாதன் கேட்டான். செருக்குப் படைத்த எமநாதனுக்கு மருட்சியுண்டாகிவிட்டது. பாணபத்திரனால் தள்ளப்பட்ட இந்தக் கிழவனின் இசையே இத்தகையது என்றால் இவர்களுக்குக் குருவாக நிற்கும் அந்தப் பாணபத்திரன் இசை எத்தகையதாக இருக்குமோ ? என்று எங்கினான். அத்தகையான பாணபத்திரனிடம் நாம் போட்டி போட்டால் நாம் வெற்றி கொள்வோம் என்பது முடியாத காரியம். ஆகவே வீணே அவனோடு போட்டி போட்டு நமது விருதுகளை இழக்கக்கூடாது. எப்படியும் இதனினின்றும் தப்பிப்போக வேண்டுமென்று எண்ணி அந்த இரவே ஒருவருக்கும் தெரியாது தன் ஊர் போய்ச் சேர்ந்தான். மறுநாள் அரசன் எமநாதன் இல்லாதது கண்டு பாணபத்திரனை வினவ, பாணபத்திரன் அரசே சோமசுந்தரக் கடவுள் என் கனவில் வந்து, தான் விறகாளாய் வந்து எமநாதனை இந்த ஊரினின்றே துரத்திவிட்டார் என்ற செய்தியை முற்றும் கூற, அது கேட்ட அரசன் பாணபத்திரனது இசைக்கு உருகி இறைவன் அவன்பால் கொண்ட கருணையை வியந்து புலவனுக்கு வேண்டிய சன்மானம் கொடுத்து இறைவனின் அருட்டிறத்தைப் போற்றிப் பணிந்தான். இத்தகைய நிலையில் நம் நாட்டிற்கு இறைவன் செய்துள்ள உயர்வை எண்ணி எண்ணி இன்புறுவோமாக. ஆதலால்தான் மணிவாசகர்,

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

என்றார் போலும்.

—

மதிப்புரை

1. திருக்குறள் ஆராய்ச்சி: வெளியிட்டோர்: திருக்குறள் மன்றம், கொழும்பு. விலை: 2—0—0. விற்பனை உரிமை: ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை—1. 14 பேராசிரியர்களின் கருத்துரைகள் அடங்கிய தொகுப்பு நூல். திருவள்ளுவர் கண்ட தமிழகம், வள்ளுவர் கண்ட நாடு, திருக்குறளும் சங்க நூல்களும், இருவேறியற்கை, சான்றோர் யார், அரண், ஒப்புரவு முதலான பல அரிய கருத்தோவியங்கள் பல அறிஞர்களால் எழுதப்பெற்றுள்ளன. இந்நூல் தமிழ் மாணவர்களுக்கு மிகுதியும் பயன்படும். கொழும்பு மன்றத்தார் செய்திருக்கும் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. இந்நூலைத் தமிழ் அன்பர்கள் போற்றுவார்களாக.

2. திருக்குறள் கட்டுரைகள்: வெளியிட்டோர்: திருக்குறள் மன்றம், கொழும்பு. விலை: 2—0—0. விற்பனை உரிமை: ஸ்ரீமகள் கம்பெனி சென்னை—1. இதில் இருபது பேராசிரியர்களின் கட்டுரைகள் உள்ளன. சிறந்த கருத்துக்கள் அடங்கியவை. ஆராய்ச்சித் திறனும் நன்றாக இருக்கிறது. திருக்குறளில் புதை பொருள்கள், கயமை, வெஃகாமை, அடக்கமும் ஒழுக்கமும், உழவர் குடி, தெரிந்து தெளிதல், அருளுடைமை, கண்ணோட்டம், தெரிந்து வினையாடல், பெண்மை முதலான பல கருத்தோவியங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் மாணவர்களுக்கு மிகுதியும் பயன்படும். இந் நூல் வெளியீடு மிகவும் பாராட்டத்தக்கது.

3. இலக்கிய காலம்: ஆசிரியர்: மு. கோவிந்தசாமி, பி.ஓ.எல் (ஆனர்ஸ்), முதல்வர், மேலைச்சிவபுரிக் கல்லூரி. பாரி நிலையம், சென்னை—1. ரூ. 2—0—0. பண்டைத் தமிழ்ப்பெருமக்களுடைய கால ஆராய்ச்சி இந்நூலில் செய்யப்பட்டுள்ளது. 26 கட்டுரைகளில் எளிய தமிழ் நடையில் தெளிவாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனேக இடங்களில் முந்திய ஆராய்ச்சிகளுக்கு மிகவும் மாறுபட்ட கருத்துக்களை வெகு வன்மையோடு எழுதியிருக்கிறார். தன் கருத்துக்களுக்கு எல்லாம் தக்க சான்றுகளையும் ஆங்காங்கே தந்திருக்கின்றார். சிவனடியார்கள் காலத்தைக் குறித்த கருத்துக்கள் வேறுபட்ட இடங்களில் கூறப்பட்டுள்ள சான்றுகள் இன்னமும் வன்மை உள்ளவைகளாக இருத்தல் வேண்டும். அதுபோலவே கம்பர் காலத்திற்கும் இன்ன

மும் வலிவான சான்றுகள் வேண்டும். பொதுவாக ஆசிரியரின் கருத்துக்கள் மிகவும் போற்றவேண்டியவை. ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் பயன்படும். தமிழ் ஆராய்ச்சி விரிந்துவரும் இக்காலில் இப்படிப்பட்ட நூல் வெளிவந்ததே காலத்திற்கேற்ற நன்மையாகும். ஆசிரியருக்குத் தமிழ்மக்கள் மிகவுங் கடமைப்பட்டுள்ளார்கள்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V.K. Punithavathi, Edited by C M Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.